விலை ரூபா: 15.00
நகர சபை, யாழ்ப்பாணம்,
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: இருபது
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை (20.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091




# ஈழத்தமிழ் மக்களுக்கு பக்கபலமாக இருப்போம்

## இலண்டனில் சோனியா காந்தி தெரிவிப்பு



(இலண்டன்)

**இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இந்தியா தொடர்ச்சியாக அவதானித்து வருகிறது. நாங்கள் எப்போதும் தமிழ்மக்களுடன் பக்கபலமாக இருப்போம். இவ்வாறு அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.**

இலண்டனில் இடம்பெற்ற 14ஆவது பொதுநலவாய நாடுகளின் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய பின், உலகத்தமிழ் பேரவையின் சார்பில் எழுப்பப் பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே சோனியா காந்தி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச் சினைகள் குறித்து நாம் தொடர்ச்சியாக அவ தானித்து வருகிறோம். இவ் விவகாரம் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளை பேணி வருகின்றோம்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்கள் எவ்வித தாமதமும் இன்றி மீள்குடியேற்றப்பட வேண்டும் என் பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிமை கள் உண்டு. நாங்கள் எப்போதும் தமிழ் மக்களு டன் இருப்பதாகவும் சோனியா காந்தி தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப் பட்டதாகக் கூறப்படும் விடயம் குறித்து வின விய கேள்விக்கு பதிலளித்த சோனியா காந்தி, சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை குறித்த வீடியோ காட்சிகள் சிலவற்றை தான் பார்த்த தாகவும் அது மிக கண்டிக்கத்தக்க விடயம் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற தாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படு மாயின் அதற்கு ஆதரவு வழங்குவீர்களா? என கேள்வி எழுப்பப்பட்டபோது,

அதுகுறித்து கருத்து வெளியிட சோனியா காந்தி மறுத்துவிட்டார். மேலும் இலங்கைப் படையினர் பெண்கள் மீது பாலியல் துஷ் பிரயோகம் செய் ததாகக் கூறப்படும் விடயம் குறித்து எழுப்பப் பட்ட கேள்விக்கு பதிலளித்த சோனியாகாந்தி, இலங்கையில் அவ்வாறா னதொரு நிலை நடந்திருப்பின் அது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம் என்றார். (ந-5)

## பிரபாகரனை இலக்குவைத்து ஒரே தடவையில் 12 யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தின

### பகிரங்கப்படுத்துகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இலக்கு வைத்து விமானப் படையினர் பல இடங்களில் தாக்குதல்களை மேற்கொண்டதாக விமானப்படையின் முன் னாள் தளபதியும் படைத்துறை அதிகாரிகளின் பிரதானியுமான எயர் சீவ் மார்ஷல் றொசான் குணதிலக தெரிவித்துள்ளார்.



வன்னியில் ஒருமுறை 5 மிக் 27 ரக விமானங்களும் நான்கு கிபீர் விமானங் களும் மூன்று எவ்-7 ரக விமானங்களுமாக மொத்தம் 12 ஜெட் விமானங்களைக் கொண்ட ஸ்குவாட்ரன் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரனை காப்பாற்ற மேற்குலகு முயற்சித்தது

### தகவல் தருகிறது விக்கிலீக்ஸ்

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா கரன் மறைந்திருந்த இடத்தை இலங்கை இராணுவம் சுற்றிவளைக்காமல் தடுப்பதற்கு மேற்கத்தேய நாடுகள் முயன்றதாக விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது.

யுத்த இரகசியங்கள் தொடர்பாக விக்கி லீக்ஸினால் நேற்றுமுன்தினம் வெளியிடப் பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக இலங்கை இராணுவத்தினர் பிரபாகரன் மறைந்திருந்த பகுதி நோக்கி கடும் ஷெல் வீச் சினை மேற்கொண்டு அவரை உயிருடன் கைது செய்ய முயன்றபோது இரு தரப்பு களுக்கும் இடையிலான போர் நிறுத்த முயற்சி ஒன்றை சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினர் முன்னெடுத்திருந்ததாக அமெ ரிக்கத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி பீற்றர் பர்லரின் தகவல் குறிப்பு அம்பலப்படுத்தி யுள்ளது. எனினும் சீனா, விடுதலைப்புலிகள் அமைப்பு பாதுகாக்கப்படுவதை விரும்பி இருக்கவில்லை.

இதற்கிடையே தாம் எதிர்பார்த்ததைவிட இலங்கை இராணுவம் விடுதலைப்புலிகள் மீது கடுமையான யுத்தம் ஒன்றை மேற் கொள்வதாக இந்திய வெளிவிவகார செயலா ளராக இருந்த சிவ்சங்கர் மேனன் கொழும் பிலிருந்த அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் எனவும் விக்கி லீக்ஸ் தெரி வித்துள்ளது. (ந-5)

## பகவான் சாயிபாபா இலங்கை வருவார்

உலகெங்கும் கோடிக்கணக்கான பக்தர் களைக் கொண்டுள்ள பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விருந்தினராக எதிர்வரும் மே மாதம் இலங்கை வரவுள்ளார்.

அவருடைய பாதுகாப்பு மற்றும் பணிவிடை களுக்கென அவருடன் சேர்ந்து மேலும் ஆயிரம் பேரளவிலானோரும் இலங்கை வர வுள்ளதாகவும்,

அதேநேரம் இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் அவருக்கான விசேட பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)




## நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தாமதமாகும்!

### செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு தமது இறுதி அறிக்கையை சமர்ப்பிற்பதற்கு மேலும் சில மாத காலம் தேவை என தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்மன் விக்கிரமசிங்க இந்த தகவலை தெரி வித்துள்ளார்.

ஆணைக்குழுவினால் பெறப்பட்ட சாட்சி யங்களை மீளாய்வு செய்வதற்கு அதிக காலம் தேவைப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள் ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**



Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## நல்லிணக்க ஆணைக்குழு...

இதனிடையே கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இன்று கண்டியில் தமது சாட்சி பதிவுகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த சாட்சிகள் பிரதானமாக 2 தரப்பினரிடம் இருந்து பதிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.பெருந்தோட்ட மக்கள் மற்றும் கிராமத்திலுள்ள சிங்கள மக்களாகிய தரப்பினரிடமே சாட்சி பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (ந-5)


**வர்த்தகப் பெருமக்களே...**


பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290



**லொறி விற்பனைக்கு**

Leyland Lorry விற்பனைக்குண்டு. தரமான முறையில் வேலை செய்யப்பட்டுள்ளது. கொழும்பு– யாழ்ப்பாணத்திற்கு உகந்த வாகனம். வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். 0783967801
குமார்
(4065)


# லிபிய இராணுவ வாகனம் மீது பிரெஞ்சு விமானம் தாக்குதல்



**லிபிய வான்பரப்பில் பறந்து லிபிய இராணுவ வாகன மொன்றின்மீது பிரெஞ்சு போர் விமானமொன்று நேற்று தாக்குதல் நடத்தியதாக பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தியரி புர்கார்ட் தெரிவித்தார்.**

ஜி.எம்.ரி. நேரப்படி 16.45 மணிக்கு (இலங்கை நேரப்படி இரவு 10மணி) இத்தாக்குதல் இடம் பெற்றதாக அவர் கூறினார்.

லிபியாவில் ஐ.நா.பாது காப்புச் சபை தீர்மானத்திற்கிணங்க விமானப் பறப்பு தடை வலயத்தை அமுல் படுத்தும் சர்வதேச நாடுகளின் நடவடிக்கையில் முதலாவதாக இடம் பெற்ற தாக்குதல் இது வாகும்.

இராணுவ வாகனமொன்றே இலக்கு வைக்கப் பட்டதாக புர்கார்ட் கூறினார்.

எனினும் எந்த வகையான வாகனம் என அவர் கூறவில்லை.

விமானப் பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்துவதில் லிபிய வான்பரப்பில் சுமார் 20யுத்த விமானங்கள் பறந்து வருவதாக ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

# சைப்பிரஸில் ஆர்ப்பாட்டம்

சைப்பிரஸ் நாட்டில் 15மாத காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் ஒருவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி சுமார் 40இலங் கையர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சண்முகன் உதஜேந்திரன் எனும் இந்நபரை உடனடியாக விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அவர் சுமார் 15 மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சண்முகனின் குடும்பத்தினர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.


**சேவை முகவர்**

**வீடு, காணி விற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதியில் களஞ்சியசாலைக்குரிய கட்டிடம், நுணாவில் A9 றோட்டிலிருந்து 1000m தூரத்தில் 21பரப்பு தென்னம் காணி, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம்,பழம்வீதி,மணல்தறைலேன்,ஸ்ரான்லி வீதி,ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில், வைமன் றோட், உரும்பிராய் 9பரப்பு, இருபாலை 45பரப்பு ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு.யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு -சுந்தரம்
0212229177, 0774819801
(4096)



**Computer Mega Sale**

2011 மார்ச் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல் லூரியில், 22,23ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் இடம்பெறும்.அரச உத்தி யோகத்தர்கள், மாணவர்களு க்கு விசேட விலை.
மேலதிக தொடர்பு: 0718570609,0759997700.
(4058)



**வாடகைக்கு**

பலாலி றோட், கந்தர் மட சந்திக்கும் பரமேஸ் வரா சந்திக்கும் இடை ப்பட்ட வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு T.P: 077914877
2226769
(4075)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை மாணிக்கம்



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை மாணிக்கம் நேற்று 19.03.2011 (சனிக்கிழமை) இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி விசாலாட்சிப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ் சென்றவர்களான கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் அன்புமருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும்,அருந்தவராணி அருந்தவராசா, சாரதாமணி ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வஸ்கந்தராஜா (நில அளவையாளர் சவுதி அரேபியா), இரஞ்சிதமலர், குலேந்திரநாதன் (மேற்பார்வையாளர் சிறைச்சாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்.

துஸ்யந்தன் சிவதர்சினி, சதீஷன் ,சசிகுமார் கவிதா, ரஜீவன், கஜந்தனா, பிரதீப், நிஷாந்தன், கஜந்தன், பவதாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரவீன் சுகன்யா, மதுஷாயினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

இரத்தினம், காலஞ்சென்ற செல்லத்துரை,செல்லம்மா பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இலகுப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), கண்மணி, சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
T.P: 0213202012

ஆஸ்பத்திரி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(4091)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

### அவசர விஷேட பொதுக் கூட்டம்

காலம் : 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1மணி
இடம் : ஒன்றிய மண்டபம்.
தலைவர் : சிவஸ்ரீ.சபா.வாஸ் தேவக்குருக்கள் (ஒன்றியத் தலைவர்)
விடயம் : நந்தன வருட (2012-ம் ஆண்டு) பிறப்பு திகதியில் ஏற்பட்டுள்ள வாக்கிய, திருக்கணித பஞ்சாங்க வேறுபாடுகளைத் தவிர்த்தல்.

அனைத்து குருமார்களும் இவ்விஷேட கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பஞ்சாங்க முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு தங்களின் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் கலந்து கொள்வதன் மூலம் ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. எமது ஒற்றுமைத் தன்மையினை வெளிப்படுத்த வாய்ப்பேற்படுகின்றது.சமூக அக்கறை உடையவர்கள் நாம் என்பதை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பமாகவும் அமைகின்றது.

அனைவரும் வருக; ஆதரவு தருக.

சிவஸ்ரீ.ச.ஸ்ரீகாந்தக் குருக்கள்
செயலாளர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம். (4086)


**PRINCESS OF WALES NURSING HOME**
132,Kokulam Kachcheri Nallur Road,Jaffna, Srilanka.
Phone- +94 (21)2226179, +94 (21)2226180
Email: princesshosp@gmail.com

**அரியதோர் சந்தர்ப்பம்**
**நழுவ விடாதீர்கள்**



அடிப்படை தாதிப்பயிற்சி நெறி (பயிற்சிக்காலம் 6 கிழமைகள்) புதன் கிழமை (23.03.2011) ஆரம்பமாகிறது. உங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளவும். அனுபவம் வாய்ந்த யாழ்.போதனா வைத்தியசாலை தாதியப் பயிற்றுனரால் பயிற்றுவிக்கப்படும்.



அனுபவம் வாய்ந்த தாதிமார்கள் உடன் தேவை.
(C-2737)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## வெளியேறியது பங்களாதேஷ் தென்னாபிரிக்காவிடம் பணிந்தது




(மிர்பூர்)

ரிசொற்சோபே - பீற்றர் கூட்டணியின் பந்துவீச்சில் சிக்கிய பங்களாதேஷ் அணி 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியடைந்து உலகக்கிண்ண தொடரில் லீக் சுற்றுடன் வெளியேறியது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் மிர்பூரில் நேற்று பகல் ஆட்டமாக நடைபெற்ற 39 ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்க - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா - சிமித் ஜோடி சிறப்பான ஆரம்பம் வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 20.4 ஓவர்களில் 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது அணித்தலைவர் சிமித் 68 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 45 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜக்கலிஸ் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் ஹசிம் அம்லா 56 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். எனினும் அம்லா 59 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய டுமினி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 30 ஓவர்களில் 141 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக கலிசுடன் இணைந்த பிளிஸ்ஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார். இதில் ஜக்கலிஸ் 64 பந்துகளில் அரைச்சதம் கடக்க தென்னாபிரிக்க அணி 41.5 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் ஜக்கலிஸ் 76 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 69 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வான்விக் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து போத்தா களமிறங்க மறுமுனையில் டு பிளிஸஸ் 48 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். எனினும் டு பிளிஸஸ் 52 பந்துகளில் (4 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் பீற்றர்சன் அதிரடி காட்ட தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 284 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரொபின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 9 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட ) 22 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ருபேல் ஹுசைன் 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் 2 விக்கெட்டுக்களையும் அப்துர் ரசாக்,மகமதுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 285 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ரிசொற்சோபே - பீற்றர்சன் கூட்டணியின் பந்தில் மளமளவென சரிந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் 5, இம்ருல் ஹைஸ் 4, சித்திக் 2, நபீஸ் 5, ரகிம் 3 ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் ஒற்றை இலக்குடன் வெளியேறினர்.

அடுத்துவந்த அணித்தலைவர் சகிப் அல்ஹசன் மட்டும் 3ஓட்டங்களை எடுத்து போராடினார். ஆனால் முடியவில்லை. பின்வரிசைவீரர்களும் ஒற்றை இலக்குடன் வெளியேற பங்களாதேஷ் அணி 28 ஓவர்களில் 78 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம்தென்னாபிரிக்க அணி 206 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று 10 புள்ளிகளுடன் பி பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது.

பந்துவீச்சில் ரிசொற் சோபே 5 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 14 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து3 விக்கெட்டுக்களையும் ரொபின் பீற்றர்சன் 7 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 12 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் போத்தா, தாகீர் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த ரிசொற் சோபே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இப் போட்டியில் வெற்றிபெற்றால் 8 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறலாம் என்ற நிலையில், பங்களாதேஷ் அணி தோல்வியுற்றதால் 6 புள்ளிகள் மற்றும் குறைந்த ஓட்ட விகித சராசரி (-1.361) காரணமாக, உலகக்கிண்ணதொடரிலிருந்து வெளியேறியது.

## எழுச்சி பெறுமா இந்தியா? மே.தீவுகளுடன் இன்றுமோதல்




(சென்னை)

உலகக்கிண்ண தொடரில் இன்று சென்னையில் நடக்கும் பி பிரிவு லீக் போட்டியில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன.

இதில் இந்திய அணி அசத்தல் வெற்றிபெற காத்திருக்கிறது.

இந்தியா,இலங்கை, பங்களாதேஷ் மண்ணில் 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கவுள்ள பி பிரிவு லீக் போட்டியில் இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்கொள்கிறது.

### கட்டாய வெற்றி

பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிரான போட்டியை சமநிலை செய்தது பின் எழுச்சிகண்ட இந்திய அணி அயர்லாந்து, நெதர்லாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்காவுக்கு எதிராக தோல்விகண்ட இந்திய அணி 5 போட்டிகளில் 7 புள்ளிகளுடன் காலிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

### ரெய்னா உறுதி

இந்தியஅணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிராக அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்த சேவாக், சச்சின் ஜோடி இன்று மீண்டும் ஒரு சிறப்பான ஆரம்பம் கொடுக்கும் பட்சத்தில் வலுவான ஓட்ட எண்ணிக்கைக்கு வித்திடலாம். 3 ஆவது வீரராக களமிறங்கி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் காம்பீர் முதல் சதம் அடிக்க முயற்சிக்கலாம். கடந்த இரண்டு போட்டிகளில் எழுச்சிகண்ட யுவராஜ் தனது ரன் வேட்டையை தொடரலாம். சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் சுரேஸ் ரெய்னா தனது முதல் போட்டியில் இன்று களமிறங்க வாய்ப்பு உள்ளது . இவர் களமிறங்கும் பட்சத்தில் விராட் ஹோலி அல்லது யூசுப்பதான் வெளியேற வாய்ப்புள்ளது.

இது வரை பெரியளவில் சாதிக்காத அணித்தலை வர்தோனி பொறுப் புணர்ந்து ஆட வேண்டும்.

### அஷ்வின் வாய்ப்பு

இந்திய அணியின் வேகப் பந்து வீச்சு எதிர்பார்த்த அளவிற்கு சிறப்பாக இல்லை. கடந்த ஐந்து போட்டிகளில் சகிர்கான் மட்டும் 12 விக்கெட் வீழ்த்தியுள்ளார். முனாப் பட்டேல் ( 9 விக்கெட்) ஓரளவு ஆறுதல் அளிக்கிறார். கடந்த சில போட்டிகளில் ஆஷிஸ் நெக்ரா, சிறிசாந்த் ரன் வள்ளல்களாக மாறியது பின்னடைவாக அமைந்தது.

சொந்த ஊரில் இளம் சுழற் பந்து வீச்சாளர் அஸ்வின் களமிறங்க அதிக வாய்ப்பு உள்ளது. இவருடன் அனுபவ வீரர் ஹர்பஜன் இணைவதால் சுழல் பலம் அதிகரிக்கும். இவர்களைத் தவிர பகுதி நேர சுழற்பந்து வீச்சில் யுவராஜ் சிங், யூசுப்பதான் சிறப்பாக செயற்படுவது கூடுதல் பலம் சேர்க்கிறது.

### ரன் ரேட் வேண்டும்

தென்னாபிரிக்காவுக்கு எதிராக தோல்வியடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி நெதர்லாந்து, பங்களாதேஷ், அயர்லாந்து அணிகளை வீழ்த்தியது.

இங்கிலாந்துக்கு எதிராக சுலபமான வெற்றிவாய்ப்பை வீணடித்ததன் மூலம் ஆறு புள்ளிகளுடன் உள்ளது.

இன்று இந்தியாவை வீழ்த்தும் பட்சத்தில் எட்டுப் புள்ளி களுடன் காலிறுதிக்கு எளிதாக முன்னேறி விடலாம்.

ஒரு வேளை தோல்வியடையும் பட்சத்தில் மற்றப் போட்டிகளின் முடிபைப் பொறுத்து ரன் ரேட் அடிப்படையில் காலிறுதி வாய்ப்பு அமையும்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?
1. ........................ 2. ........................
2. ........................ 4. ........................
பெயர்: ........................
முகவரி: ........................
........................
தொ.பே: ........................
தே.அ.அ.இல: ........................
சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?
உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஹட்ரிக் விக்கெட் சாதனை படைத்த பந்துவீச்சாளர் யார்?
........................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ........................
முகவரி:- ........................
........................
தொ.பே:- ........................
தே.அ.அ.இல:- ........................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி முடிவுகள்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற கழகங்களின் பெயர் விபரம் வருமாறு,

**கிரிக்கெட் போட்டி (ஆண்கள் பிரிவு)**

நாச்சிக்குடா ஜின்னா விளையாட்டுக் கழகம் , கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம்

**கரப்பந்தாட்டம் (ஆண்கள் பிரிவு)**

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம், ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்

**கரப்பந்தாட்டம்(பெண்கள் பிரிவு)**

முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம், பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகம்.

**எல்லைப் போட்டி**

நாச்சிக்குடா சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம், இரணைமாதா நகர் சென்மேரீஸ் விளையாட்டுக்கழகம்.

வலைப்பந்தாட்டம், கபடி, உதைபாந்தாட்டம் ஆகிய போட்டிகள் இந்த வாரத்தில் நடைபெறும் என பூநகரி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அ.பிரபாகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9-84)

# பாடசாலை மட்ட கணித புதிர்ப்போட்டி

வலய மட்ட கணிதப்புதிர்ப்போட்டி மே மாதமும் மாகாண மட்ட கணிதப்பு திர்ப்போட்டி யூன் மாதமும் தேசிய மட்ட கணித புதிர்ப்போட்டி யூலை மாதமும் நடைபெறவுள்ளது. எனவே, பாடசாலை மட்ட கணித புதிர்ப் போட்டியை உடன் நடத்தி விண்ணப்பப் படிவத்தினை இரண்டு பிரதிகளில் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்பாக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரால் சகல கோட்டங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

# போலி வங்கி இணையத்தளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிப்பு

அதிகரித்து வரும் போலி வங்கி இணையத்தளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை கணனி அவரகால பதிலளிப்பு அணி இணையத்தள பாவனையாளர்களை கோரியுள்ளது.

போலி இணையத்தளங்கள் தொடர்பாக இலங்கையில் செயற்படும் சர்வதேச வங்கிகள் பல வற்றிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அவ்வமைப்பின் சிரேஷ்ட பொறியியலாளர் ரோஹன் பள்ளியகுரு தெரிவித்துள்ளார். மோசடியாளர்கள் போலி இணையத்தளங்களை உருவாக்கி பெரும் எண்ணிக்கையான மின்னஞ்சல்களையும் தமது போலி இணையத்தளத்தின் இணைப்பையும் அனுப்புகின்றனர். இவற்றின் மூலம் பயனாளரின் பெயர், கடவுச் சொல் என்பவை திருடப்படுகின்றன. அதன் பின் அவை பல்வேறு மோசடிகளுக்கு பயன்படுத்தபடுகின்றன என அவர் கூறினார். பல போலி இணையத்தளங்களை முடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு தகவல்

## மூளை உபயோகம்

*"நான் ஒரு விடயம் சொல்லுவேன் அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள்தான் சொல்ல முடியும்."*

*"சொல்லுங்கள்"*

*"நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை என்கிறேன்."*

*"உண்மை தான்... ஒரு சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத்தான் உபயோகப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது."*

*"பாத்தீர்களா... அப்படி இருக்கும் போது அது ஞாபகமில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக்கொண்டு இருக்கிறோம்."*

*"ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை பதிந்து வைத்துக்கொள்ள முடியும்."*

*"அப்படியா..."*

*"நாம் படிப்பது மனதில் பதிய வேண்டுமானால் நாம் அதை படித்த பின்னரும் மனதில் நிறுத்தி 10 நிமிடமாவது அசை போட வேண்டும்."*

*"காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா?"*

*"மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து விடுகிறது. அவ்வப்போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்."*

*"இது ஒரு மனநோய் மருத்துவமனை தானே?"*

*"ஆமாம்"*

*"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்கு கேள்வி கேட்டதனால் என்னை மனநோயாளி என்று நீங்கள் தப்பாக புரிந்து கொள்ளக் கூடாது."*

*"இவ்வளவு தூரத்திற்கு பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாது... நான் டாக்டர் இல்லை!"*

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம்

(பூநகரி)

பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன் முன்னேற்பாட்டுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை பூநகரி பிரதேச செயலக அலுவலகத்தில் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இராணுவத்தளபதிகள், பொலிஸ் அத்தியட்சகர், கடற்படை அதிகாரிகள், கிராம சேவை அலுவலர்கள், பிரதேச சபை செயலாளர், பூநகரி பிரதேச வைத்திய அதிகாரிகள், சுகாதாரப்பிரிவினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் விழாவில், நாச்சிக்குடா இரணைமாதா நகர், பள்ளிக்குடா, யாழ்ப்பாணத்துறை ஆகிய துறைகளிலிருந்தும் யாத்திரிகர்கள் வரக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-9-84)

# இராசி பலன்

*20.03.2011*
*பங்குனி 06, ஞாயிற்றுக்கிழமை*
*சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு*
*பிரதமை முன்னிரவு 10.5 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 9.06 மணிவரை*
*இராகுகாலம் 4.48-6.18 மணிவரை*
*சுபநேரம் 9.18-10.48 மணிவரை*
*இரண்டாம் த்வக்கால ஞாயிறு*

**மேடம்** கடுமையான எதிர்ப்புக்கள் கூடதிடீரென உங்களுக்கு சாதகமாக மாறும், பிறர் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**இடபம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சியேற்படும்.

**மிதுனம்** நினைத்த காரியங்கள் நிறைவேறலாம், தாய்வழி உறவினர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், உறவினர் உதவியுண்டு.

**சிங்கம்** பொருட்சேர்க்கைக்கு வழி சமைப்பீர்கள் , தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்.

**கன்னி** கதிரவன் வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தினர் மனம் நோகாமல் நடப்பது நல்லது, தேவையற்ற கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**துலாம்** தாராளமாக செலவிட்டு மகிழும் நாள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், வழக்கமாக செய்யும் பணியை மாற்றியமைப்பீர்கள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்தி வீடு வந்து சேரும் நாள், பொருளா தார நிலை திருப்தி தரும், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பர், பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு** புத்திசாதுரிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் நன்மையளிக்கும், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கூட்டு முயற்சி வெற்றி தரும், பொதுநல ஈடுபாட்டால் பெருமை சேரும், பகை யொன்று நட்பாகலாம்.

**கும்பம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், குடும்பத்தில் மனக்கசப்பு ஏற்பட்டு அகலும், தொழிலில் கவனம் தேவை.

**மீனம்** நிதி நிலை உயரும் நாள், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், குடும்பத்தில் அந்நி யோன்னியம் அதிகரிக்கும், செல்வாக்கான நாள்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 130 | 150 | 180 |
| தக்காளி | 50 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 150 | 180 |
| பூசணி | 60 | 60 | 70 |
| புடோல் | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 130 | 110 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 |
| கரணைக்கிழங்கு | - | 80 | 100 |
| பயிற்றங்காய் | 170 | 100 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60-70 | 50 | 80 |
| கறிமிளகாய் | - | 150 | 180 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 500 |
| போஞ்சி | 120 | 100 | 140 |
| கத்தரி தம்புள்ள | 40-50 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLI காத்திடும் துணை



இறைவனுக்கு பூஜித்த மலர் மாலையைத் தொங்க விடுவதனால் தொழிலில் பாதுகாப்பு கிடைக்கும்.




இலங்கையின் வயல் மற்றும் மண் நிலங்களுக்குமான
வாகனங்களையும் பாகுபாடின்றி காத்திடும்
காப்புறுதியின் பாரிய காவலன்...

AAA RAM RATINGS AA- Fitch Ratings

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*11ஆவது வீரர்களின் கிரிக்கெட் போர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது. நிகழ்வில் பிரதம விருந்தினர்கள், வீரர்கள் அழைத்து வரப்படுவதையும் வீரர்கள் கைலாகு கொடுத்து வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம்.*
*(படங்கள்:பாலமுரளி)*

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் கார்த்திகை மாதம் ஹோப்த சில்றன் நிறுவனம், சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நல்லூர், கோப்பாய். சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள 3 ஆயிரம் மாணவர்கள் கண்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்கமைய நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் ஞானபண்டிதா, கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை, ஸ்தான சி.சி.த.க.பாடசாலை, கோண்டாவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை, இளையதம்பி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 13 மாணவர்களும் வலிகாமம் கோப்பாய் பகுதி பிரதேச செயலர் பிரிவில் நாவலர் பாடசாலையில் 13 மாணவர்களும் கண்ணாடியைப் பெறுவதற்கு தெரிவாகியுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 43 மாணவர்களும் காரைநகர் உதவி அரசாங்க பிரிவில் டாக்டர் தியாகராஜா மகா வித்தியாலயத்தில் 39 மாணவர்களும் வலந்தலை அ.மி.த.க. பாடசாலையில் 2 மாணவர்களும் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும் யாழ்ரன் கல்லூரியில் 41 மாணவர்களும் யாழ்ரன் ஆரம்ப பாடசாலையில் 9 மாணவர்களும் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் 2 மாணவர்களும் கண்ணாடி பெறத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இருபாலையிலுள்ள மக்கள் நலன் காக்கும் நிறுவனத்திலும் காலை 11 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் மேற்கு ஸ்தான பாடசாலையிலும் வைத்து வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகரிலுள்ள டாக்டர் தியாகராஜா மகாவித்தியாலயத்திலும் நடைபெறும். இந்நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர்விரிசெல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே, தெரிவான பாடசாலை மாணவர்களை பாடசாலை அதிபர்கள் உரிய இடத்திற்கு சமுகமளிக்க ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு ஒழுங்கமைப்புச் செயலாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# லெபனானில் இலங்கைப்பணிப்பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

லெபனானில் பாபட் எனும் நகரில் வீடொன்றில் பணி புரிந்த இலங்கைப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேனகா பிரின் ஜனனி என்ற பணிப்பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயர்மாடிக் கட்டத்தில் இருந்து விழுந்து குறித்த இலங்கைப் பணிப்பெண் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பெண் தான் பணி புரிந்த வீட்டிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் இவ்வாறு மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# புத்தளம் அனல் மின்நிலைய முதற்கட்ட வேலைகள் ஆரம்பம்

புத்தளம் அனல் மின்நிலையத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அனல் மின்நிலையம் செயற்படத் தொடங்கியதும் மேலதிகமாக 300 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டப் பணிகளுக்காக 45 கோடி 50 இலட்சம் அமெரிக்க பொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியுதவியினை சீன அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# போலி நாணயத்தாள்களுடன் சந்தேக நபரொருவர் கைது

(கொழும்பு)

ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் சில வற்றுடன் சந்தேகநபர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். வவுனியா, பூந்தோட்டம், மதீனா நகரைச்சேர்ந்த இவர் வவுனியா நகரில் அங்காடி வியாபாரம் செய்பவர் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கண்டியில் போலி நாணயங்களுடன் கைதான ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேக நபரிட மிருந்து புத்தம்புதிய ஆயிரம் ரூபாய் தாள்கள் 79 மற்றும் 100 ரூபாய் தாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்[illegible] (ஸ்ரீ-2)



யாழ்.மண்ணில்....
மீண்டும் திண்டுக்கல் ஐ.லியோனியின்
நகைச்சுவைப் பட்டிமன்றம்
இன்று 20.03.2011 யாழ். வீரசிங்கம் மண்டபம்- மாலை 3.00 மணி
அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்-மாலை 6.30 மணி
21.03.2011 யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி- மாலை 6.30 மணி
22.03.2011 சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம்- மாலை 6.30 மணி
23.03.2011 சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மைதானம் - மாலை 4.00 மணி
மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம் மாலை - 6.30 மணி
ரிக்கட் ரூபா 200/-, 300/-, 500/- மாணவர்களுக்கு: 100/-
(4087)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம் 2011

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 03.04.2011 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 27.03.2011ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளரின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

| | |
|---|---|
| செ.சிவானந்தன் | என்.இராஜதேவன் |
| கௌரவ செயலாளர், | தலைவர் |
| பழைய மாணவர் சங்கம், | பழைய மாணவர் சங்கம். |
| 22, கலைமகள் வீதி, அரியாலை. | |


9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 1942 04 13
விண்ணகம் 2002 02 22
அமரர் செல்லத்துரை செல்வராசா
திதி: அமர பிரதமை (20.03.2011)
ஆண்டு ஒன்பது ஆகியும் ஆறவில்லை எங்கள் மனம்- அன்று நிஜமாய் நின்ற எங்கள் தெய்வம் - இன்று நிழலாய் தோன்றி மறைவதேன்!- ஐயா வருவேன் என்று விடை பெற்று சென்றீர்கள் வராமல் மறைந்ததேனோ! என்றும் உம் நாம வரிகளுடனே எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடருதய்யா... என்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் உறவினர்கள்.
யாழினி யாழ் மோட்டோர்ஸ்,
மானிப்பாய் றோட், கைதடி சந்தி, கைதடி.
தொ.பே:021 490 5009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Flex Travels வழங்கும் **FREE AIR TICKET** உடன்



# IELTS இன்றி
# Spot Admissions
# மூலம் UK இல்
# உயர் கல்வி

**West End College London**



| | |
|---|---|
| திகதி : | **26th March 2011** |
| இடம் : | **4, IBC Road, Colombo 6.** |
| நேரம் : | **10.00am to 4.00pm** |

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் **இலவசம்**

**For appointment please contact :**

**0777-761346**
**0775-952607**

**flex Institute**
*Step Towards a Bright Future*
(A Subsidiary of **Flex Graphic**)

**4, IBC Road, Wellawatte, Colombo 6.**

E-mails > flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk

FLEX Graphic

**Web: www.flexinstitute.lk**


பொதுசன நூலகம்
ஆவணத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் வெற்றியீட்டிய மாணவிக்கு தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரெட்ணம் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-எண்.குமார்)*

# இந்து சமுத்திரத்தில் டியுனா மீனினங்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது

## இந்திய கடற்பிராந்திய மாநாட்டில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கைத்தொழில் மயமாகும் மீன்பிடித்துறையால் இந்து சமுத்திரத்தில் டியுனா மீன் இனங்களின் தொகை குறைவடைந்து செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்திய கடற்பிரந்திய டியுனா மாநாட்டில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வலயத்தின் மீன் முகாமைத்துவத்தின் ஊடாக டியுனா மீன் இனத்தை அதிகரிக்கச் செய்வதற்கான உபாயங்களைக் கண்டறிவதே இந்த மாநாட்டின் பிரதான குறிக்கோளாகவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த மாநாட்டில் இந்து சமுத்திர வலயம் மற்றும் அதற்கு அப்பாற்பட்ட வலயங்களைச் சேர்ந்த 35 நாடுகளின் 250 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

ஆழ்கடலில் மீன்பிடிக்கக் கூடிய நிபுணத்துவத்தைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான்,கொரியா, பிரான்ஸ், தாய்வான் மற்றும் சீன நாடுகள் இந்த மாநாட்டில் தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளன.

இந்த மாநாட்டில் உரையாற்றிய மீன்பிடி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன குறித்த பிரமாணத்தைவிட அதிகமாக மீன்களை பிடிப்பதன் ஊடாக இந்து சமுத்திரத்தில் 75 சதவீதம் மீன் வளம் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை டியுனா மாநாட்டில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிசும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கருத்துரைத்த அவர், மீன்துறை மாத்திரமன்றி கடல் சார்ந்த ஏனைய துறைகளாக சுற்றுலாத்துறை, படகு நிர்மாண மேம்பாடு போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தார். (ஸ்ரீ-2)

# பஹ்ரைனிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

பஹ்ரைனிலுள்ள இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கு உதவுவதற்காக குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து அதிகாரிகள் குழுவொன்று பஹ்ரைனுக்கு அனுப்பப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பஹ்ரைனில் அந்நாட்டு அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அங்கு நிலைமையை அவதானிப்பதற்கும் இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கும் உதவுவதற்கும் 4 பேர் கொண்ட குழுவொன்று குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து பஹ்ரைனுக்கு செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாழைக்குலைச் சங்க கிளை கொழும்பில் திறந்து வைப்பு

வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவு சங்கத்தினது கொழும்பு கிளையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இல. 44 , ஹம்டன் வீதி, வெள்ளவத்தையிலேயே இக்கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு வரப்படும் வாழைக்குலை, வாழைப்பூ, வாழையிலை உள்ளிட்டவற்றுடன் காய் கறிகளும் நிலையத்தினூடாக விற்பனை செய்யப்படவுள்ளன. (ந)

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மக்களின் மெய்யான அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் மக்களின் மெய்யான அபி லாஷைகளை பிரதிபலிக்கவில்லை என ஜே.வி.பி.கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். தேர்தலின் போது அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அழுத்தங்கள், இடையூறுகள், பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் அரசாங்கம் இந்தத் தேர்தலில் வெற்றியீட்டியதாக தெரிவித்துள்ளார். திஸ்ஸ மஹறாம பிரதேசத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் பல்வேறு வழிகளில் இலஞ்சம் வழங்கி வாக்குகளைப் பெற்றுக் கொண்டதாகவும் இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலம் தாம் சோர்வடையப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு பிரச்சினை, ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரம் ஆகிய பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வினை வழங்காது என அவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப் போவதில்லை எனவும் இந்தத் தேர்தல் முடிவுகள் மக்களைப் பெரிதும் ஏமாற்றமடையச் செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.03 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★கி.மு44- ஜூலியஸ் சீசரின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

★1602-டச்சு கிழக்கிந்தியக் கம்பனி அமைக்கப்பட்டது.

★1616- சேர் வால்ட்டர் ரலி 13 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்னர் லண்டனில் விடுவிக்கப்பட்டார்.

★1739- நாதிர் ஷா டில்லியை கைப்பற்றி நகரைச் சூறையாடினான்.

★1760-பாஸ்டன் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரில் 349 கட்டடங்களை அழித்தது.

★1815- எல்பா தீவில் இருந்து தப்பிய நெப்போலியன் 140,000 இராணுவப் படைகளுடனும் 200,000 தன்னார்வப் படைகளுடனும் பாரிஸை மீண்டும் கைப்பற்றி "நூறு நாட்கள்" ஆட்சியை ஆரம்பித்தான்.

★1861- மேற்கு ஆர்ஜென்டீனாவில் இடம்பெற்ற நிலநடுக்கம் மெண்டோசா நகரை முற்றாக அழித்தது.

★1916-அல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது சார்பியற் கோட்பாட்டை வெளியிட்டார்.

★1934-ஜப்பானில் ஹாக்கோடேட் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் தீ 4 ஆயிரத்து 170 சதுரகிலோ மீற்றர் நகரை அழித்து சுமார் 2 ஆயிரத்து 165 பேர் கொல்லப்பட்டனர்.

★1942- போலந்தில் ஸ்ஜியேர்ஸ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியரினால் கட்டாய வேலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 100 போலந்து நாட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★1942-மேற்கு உக்ரேனில் ரொஹார்ட்டின் நகரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 3ஆயிரம் யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர்.

★1948-சிங்கப்பூரில் முதலாவது தேர்தல் இடம்பெற்றது.

★1956-பிரான்ஸிடம் இருந்து துனிசியா விடுதலை பெற்றது.

★1974-லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையின் வெளியே ஆன் இளவரசி அவரது கணவர் கப்டன் மார்க்பிலிப்ஸ் ஆகியோரைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

★1988- எரித்திரியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் அஃப்பெட் நகரைக் கைப்பற்றினர்.

★1995- டோக்கியோவில் சுரங்கப் பாதை ஒன்றில் நச்சுவாயு, தாக்குதல் ஒன்றில் 12 பேர் கொல்லப்பட்டு ஆயிரத்து 300 பேர் காயமடைந்தனர்.

★2003- ஈராக்கின் விடுதலை என்ற பெயரில் அமெரிக்கக் கூட்டு படைகளால் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1828-ஹென்ரிக் இப்சன், நோர்வே நாட்டவர், நவீன நாடக இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படுபவர் (இ.1906)

★1911-அல்போன்சோ ரோபில்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ.1991)

★1987-கங்கனா ரனாத், திரைப்பட நடிகை

### இறப்புக்கள்

★1993-பொலிகிராப் கூஷ்,நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி.1911)

***1953- இலங்கையைச் சேர்ந்த நவரத்தினசாமி, பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தார்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்




(சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள் வரை)

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர சனி காலம்!

செல்வம் சேர்ப்பதிலேயே குறிக்கோளாக இருக்கும் துலாம் ராசி நேயர்களே!

எவரையும் எளிதில் ஈர்க்கும் தன்மை உங்களிடம் உண்டு. மனதில் பலரகசியங்களை மறைத்து வைத்திருப்பவர்கள் நீங்கள். குடும்பக் கவலை அதிகமாக இருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள். பயணங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். பக்கபலமாக இருப்பவர்களை நம்பி சில காரியங்களைச் செய்யத் தொடங்கிவிட்டு, பிறகு நீங்கள் செய்யும் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் சுக்ரன் சனி வீட்டில் சஞ்சரிக்கிறார். அந்த சனி வக்ரகதியில் விரய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். வருமானம் போதுமானதாக இருக்காது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். குழந்தைகள் உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சில காரியங்களைச் செய்து கவலையை உருவாக்கலாம். வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நல்லது.

பொதுவாக, ஐந்துக்கு அதிபதியாக சனி விளங்குவதால் அதன் வக்ர காலத்தில் வெளிவட்டார பழக்க வழக்கத்தில் கூடுதலாக விழிப்புணர்ச்சி தேவை. வீண்பழிகளை எதிர்கொள்ள நேரிடலாம். பூர்வீக சொத்துக்களை பங்கீடு செய்வதில் புதிய நபர்களால் பிரச்சினைகள் வரலாம். எனவே, ஒருசில மாதங்கள் எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்வது நல்லது.

காரியம் தாமதித்தாலும், கடைசி நேரத்தில் கைகூடி மகிழ்ச்சியைத் தரும்.

சொத்துக்களை வாங்க நினைப்பவர்கள், பத்திரங்களைச் சரிபார்த்து வாங்குவது நல்லது. வீட்டு பராமரிப்புச் செலவு கூடும். உறவினர்கள் உங்கள் இல்லம் தேடிவந்துகொண்டே இருப்பர். வரவில் பாதி விருந்தினருக்கும், வாகன பயணத்திற்குமாகவே செலவாகலாம். சனிபுத்தி உள்ளவர்கள் தக்க பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

எதிர்வரும் 23ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் ஐந்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகும். பெண் குழந்தைகளால் ஏற்படும் பிரச்சினைகளை ஒருவழியாக சமாளிப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்க வேண்டுமென்று சேமித்து வைத்த தொகை, வீண் விரயங்களாகவும் மாறலாம். அம்பிகை வழிபாடு உங்களுக்கு இன்பங்களை வழங்கும்.

எதிர்வரும் 24ஆம் திகதி மீன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். ஆறில் சஞ்சரிக்கும் செவ்வாய், சனியைப் பார்ப்பதால், உத்யோகம், தொழிலில் திடீர் மாற்றங்கள் உருவாகும். குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குருவுடன் செவ்வாய் கூடியிருப்பதால், சுபச்செலவுகளை மேற்கொள்வதன் மூலம் மன அமைதியைப் பெறலாம். லாபாதிபதி சூரியன், விரயாதிபதி புதனுடன் இணைந்து சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் பங்குதாரர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். செவ்வாய் பார்வை ஏற்படும் பொழுது, சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் விரயச்சனியின் ஆதிக்கம் கூடுவதால், குடும்பச்சுமை கூடும். கொள்கை பிடிப்போடு செயல்பட இயலாது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அடையலாம். புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும்பொழுது, யோசிப்பது நல்லது. குழந்தைகள் வழியில் மன அமைதி குறைவான சம்பவங்கள் நடைபெறலாம். அன்பும், ஆதரவும் அதிகம் காட்டினால், நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம். அங்காரக வழிபாடும், ஆஞ்சநேயர் வழிபாடும் அன்றாட வாழ்க்கையை சிறப்பானதாக மாற்றும்.




(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்!

தெய்வ வழிபாட்டின் மூலம் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருச்சிக ராசி நேயர்களே!

நீங்கள் திட்டமிட்ட காரியத்தைத் திட்டமிட்டபடியே நடத்திக் காட்டுவீர்கள். திடீர், திடீரென குணம் மாறுகிறதே என்று சிலர் உங்களைப் பார்த்துப் பயப்படுவார்கள். ஆனால், இரக்கக் குணத்திற்கு நீங்கள் சொந்தக்காரர்கள் என்பதை இயல்பாகப் பேசும்போது புரிந்து கொள்வர். மற்றவர்களுக்கு யோசனை சொல்வதன் மூலம், மனதில் இடம் பிடிப்பவர்களும் நீங்கள் தான். சிரித்த முகமும், சிந்திக்கும் ஆற்றலும் தான் உங்கள் பெருத்தவெற்றிக்கு காரணம்.

உங்களுக்கு இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் ராசியிலும், இலாப ஸ்தானத்திலும் பதிகிறது. எனவே, தொழில் வளர்ச்சி கூடும். தொகை வரவு எதிர்பார்த்தபடி வந்துசேரும்.

சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்ரபலத்தால் பெண் வழி உதவி கிடைக்கும். கொடுக்கல் -வாங்கல்களில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். புத-ஆதித்ய யோகம் எனப்படும் பொன்னானயோகம் இருப்பதால், அரசுவழி அனுகூலங்களும், அரசியல் வாதிகளால் ஆதாயங்களும் கிடைக்கலாம்.

ராசிநாதன் செவ்வாயின் பார்வை களத்திர ஸ்தானத்தில் பதிவதால், தங்களுக்கோ, தங்கள் உடன் பிறப்புகளுக்கோ திருமண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றாக நடைபெறும். வீட்டு பரா மரிப்புச் செலவுகள் கூடினாலும், கலையார்வம் மிக்க நீங்கள் வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இரண்டில் ராகுவும், எட்டில் கேதுவும் சஞ்சரிப்பதால், சர்ப்ப சாந்திகளை முறைப்படி செய்வதன் மூலமும், ஆனைமுகப் பெருமான், ஆறுமுகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும், சிவாலய வழிபாட்டில் சிந்தையைச் செலுத்துவதன் மூலமும், விஷ்ணு, இலக்குமி வழிபாட்டில் விருப்பத்தைக் கூட்டிக் கொள்வதன் மூலமும், நல்ல தகவல்களை நாளும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

எதிர்வரும் 23ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 12க்கு அதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். தாய்வழி ஆதரவு பெருகும். தாரத்தின் வழியிலும் உதிரி வருமானங்கள் பெருகும். சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். அந்நிய தேச அனுகூலம் கிடைக்கும்.

## சிவல்புரி சிங்காரம்

ராசிநாதன் செவ்வாய் எதிர்வரும் 24ஆம் திகதி மீன ராசியில் சஞ்சரித்து, லாப ஸ்தானத்தைப் பார்க்கப் போகிறார். எனவே, தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி வக்ரகதியில் இயங்குவதால், பங்குதாரர்களிடம் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. இக்காலத்தில் திருநள்ளாறு மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பெரிச்சிக் கோவில் வழிபாடு தித்திப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

மாதம் முழுவதும் மகத்தான பலன்களைப் பெற, செவ்வாய் தோறும் வள்ளி மணாளப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஒரு இனிய மாதமாக அமையும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். இல்லத்தில் உள்ளவர்கள், உள்ளம் மகிழும் விதம் நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய தொழில் தொடங்கும் திட்டத்திற்கு உங்கள் சகோதரர்கள் பூரண ஒத்துழைப்புச் செய்வர். கும்பச் சுக்ரனால் தாய்வழி ஆதரவு பெருகும். தன ஸ்தானத்து ராகுவால் தன வரவு அதிகரிக்க, ராகு ப்ரீதி செய்வது நல்லது.

# பகிர்வு

## நிலவின் ஒளியை மறைத்த மெழுகுவர்த்தி!

அவன் ஒரு அரசன். "நான்" என்ற அகங்காரம் நிரம்பியவன். ஒரு நாள் அவன் வேட்டைக்குச் சென்றபோது காட்டிலே ஒரு துறவியைச் சந்தித்தான். கண்களை மூடித் தியானம் செய்து கொண்டிருந்தார் துறவி. "நான் பல நாடுகளை வென்று, என்நாட்டோடு இணைத்திருக்கிறேன். நான் வென்று வந்த செல்வத்தால் கஜானா நிரம்பி வழிகிறது. அந்தப்புரம் எங்கும் நான் கவர்ந்து வந்த மாற்று தேசத்து அழகிகள் இருக்கிறார்கள். ஆனால், நான் சந்தோசமாக இல்லை. எனக்கு எப்போது மகிழ்ச்சி கிடைக்கும்?" - அரசன் கேட்டான்.

தியானம் கலைந்ததால் கண்விழித்த துறவி சற்றே கோபமாக "நான் செத்தால் தான் உனக்குச் சந்தோசம் கிடைக்கும்..." என்று சொல்லிவிட்டு கண்களைமூடி, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார் நான் எத்தனை பெரிய அரசன் என்னையே அவமானப்படுத்துகிறாயா? என்றபடி கொஞ்சமும் சிந்திக்காது துறவியைக் கொள்வதற்காக இடுப்பிலே இருந்த கத்தியை உருவினான் 'அட மூடனே... நான் என்றால், என்னைச் சொல்லிக் கொள்ளவில்லை... நான் என்ற இறுமாப்புச் செத்தால்தான் உனக்கு சந்தோசம் கிடைக்கும்...' என்று துறவி விளக்கினார்

நம்மை விட படிப்பிலோ, பதவியிலோ, செல்வத்திலோ குறைவானவன் என்று நாம் மதிப்பிட்டு வைத்திருக்கும் ஒருவர், ஒரு விவாதத்தின்போது நாம் சொல்லும் கருத்துக்கு "ஆமாம் சாமி" போடாமல் மாற்றுக் கருத்தைச் சொல்லும்போது அதை ஏற்றுக் கொள்ள நம் "EGO" இடம் கொடுப்பதில்லை.

இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், இது போன்ற "EGO" உடையவர்கள். "நாம் சொல்லும் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்... நமக்கு எல்லோரும் மரியாதை கொடுக்க வேண்டும்..." என்று தான் நினைக்கிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்..? மற்றவர்கள் இவர்களுக்கு மரியாதை கொடுத்தால் தான் இவர்கள் சந்தோசப்படுவார்கள். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால், இவர்கள் தங்களின் மகிழ்ச்சிக்காக மற்றவர்களின் தலையாட்டலை எதிர்பார்த்திருப்பார்கள்!

இன்னும் பச்சையாகச்சொன்னால், "எனக்கு மரியாதை கொடு..., எனக்கு மரியாதை கொடு என்று மற்றவர்களிடம் மறைமுகமாகப் பிச்சையெடுப்பவர்கள் இவர்கள். "மரியாதை" என்ற பிச்சையை மற்றவர்கள் இவர்களுக்கு கொடுக்க மறுக்கும் போது, இவர்களின் அமைதி பறிபோய் விடுகிறது. சந்தோசம் தொலைந்துவிடுகிறது.

நமது வேதங்கள் ஆண்டவனை "ஆனந்தம்" என்று குறிப்பிடும் இதை ஏன் சொல்கிறேன் என்றால், Edging God Out என்பதன் சுருக்கம்தான் EGO! அதாவது நம்மைவிட்டு ஆண்டவன் வெளியேறும் நிலை. அதாவது ஆனந்தம் வெளியேறும் நிலைதான் 'EGO'!

"கடவுளே! 'நான்' என்ற அகங்காரத்தை இதோ உடைத்துவிடுகிறேன்..." என்று நமக்கு நாமே உணர்த்தத்தான் தேங்காயை ஒரு அடையாளப் பொருளாகக் கோயிலிலே உடைக்கிறோம்.

சீனா. உதயகுமார்
சமரபாகு, வல்வெட்டித்துறை

தேங்காயின் கடுமையான ஓடு உடையும்போது எப்படிச் சுவையான இளநீர் வெளிப்படுகிறதோ, அதே மாதிரி நமது அகங்காரம் என்ற "EGO" உடையும்போது சந்தோசம் வெளிப்படும்.

அலுவலகத்திலோ அல்லது நண்பர்கள் மத்தியிலோ உங்கள் கருத்தை நீங்கள் சொல்ல நினைத்து, அதை நீங்கள் அழுத்தமாக சொல்கிறீர்கள். ஆனால், நீங்கள் சொன்ன கருத்து எடுபடவில்லை. நீங்கள் 'EGO' இல்லாதவராக இருந்தால், இதுபற்றி கவலைப்பட மாட்டீர்கள். உங்களின் கருத்தை மற்றவர்கள் பாராட்டினாலும் சரி, கிண்டல் செய்தாலும் சரி. ஏற்றுக்கொண்டாலும் சரி, கண்டு கொள்ளாவிட்டாலும் சரி... இதனால் உங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

கவிஞர் தாகூரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது. ஒரு முறை படகில் ஏறி, யமுனை நதியைக் கடந்து கொண்டிருந்தார் கவிஞர் தாகூர். அது இரவு நேரம். படகிலே இருந்த சின்ன அறையில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தாகூர் கவிதை எழுத முற்பட்டார். ஆனால், அன்று ஏனோ தெரியவில்லை... பிடிபடாமல் தாகூரிடமே கவிதை கண்ணாமூச்சி விளையாடியது. கடைசியில் சோர்ந்து போன தாகூர், மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டார். மெழுகுவர்த்தியை அணைத்ததுதான் தாமதம்... நதியும், படகும் நிலாவின் வெளிச்சத்தில் அழகாக ஒளிர்வது தெரிந்தது. இதைப் பார்த்ததும் தாகூருக்கு கவிதை பெருக்கெடுக்க ஆரம்பித்துவிட்டது.

இந்த சம்பவத்துக்கும் EGO வுக்கும் என்ன சம்பந்தம்...? ஒரு சின்ன மெழுகுவர்த்தி, எப்படி நிலாவின் ஒளியையே தாகூரின் கண்ணிலிருந்து மறைத்துவிட்டதோ, அதே மாதிரித்தான் EGO! நிலா என்கிற சந்தோசத்தை அது மறைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

11

### உடனடி மாதிரி

அடையாளமிடப்பட்ட சளிப்பாத்திரத்தினை நோயாளியிடம் கொடுக்கவும்

✦ ஆழமான உட்சுவாசத்தினை 2-3 தடவைகள் செய்யவும்.

✦ அடி நெஞ்சில் இருந்து இருமவும்.

✦ பாத்திரத்தினை வாயிற்கு அருகில் கொண்டு வந்து சளியினை அதனுள் துப்பவும்.

✦ பாத்திரத்திற்கு வெளிப்புறத்தில் சளி படக்கூடாது.

✦ எச்சில் அல்லது மூக்கு நீரினைக் கொடுக்கக்கூடாது.

✦ சளி போதுமான அளவு வராவிடின் மீளவும் இருமி, சளியினைக் கொடுக்கவும்.

✦ சளிப்பாத்திரத்தினை இறுக்கமாக மூடவும்

### அதிகாலை மாதிரி

1.அடையாளமிடப்பட்ட பாத்திரத்தினை நோயாளியிடம் கொடுத்துவிடவும்.

2.காலையில் வாயினை நீரினால் கொப்பளித்த பின் சளியினை எடுக்கவும்.

3.சூடான நீரைப் பருகுவதால் சளி வருவது சுலபம்.

### சரியான சளி மாதிரி

1. தடித்த சளியாக இருக்கும்.
2. மஞ்சள் நிறமாக இருக்கும்.
3. போதிய அளவு இருக்கும் (2 மில்லிலீற்றர்) எச்சில், மூக்கு நீர் இராது

### VIII. சளிப்படலம் தயாரிப்பும் பரிசோதிப்பும்

படலமாக்கல்
↓ படரவிடல்
உலர்த்தல்
நிலைக்கவிடல்

சாயமிடல்
↓ சாயமிடல்
கழுவல்
நிறமாக்கல்
கழுவல்
மீள்சாயமிடல்
கழுவல்
காயவிடல்

நுணுக்குக்காட்டிப் பரிசோதனை
↓
பதிவு செய்தலும் முறையிடுதலும்

#### *அ. சளிப்படலம் சாயமிடல்*

1.புதிய கண்ணாடித் தகட்டில் டயமன் பென்சிலால் ஆய்வுகூட இலக்கத்தை எழுதவும்.

2.ஈர்க்கினை முறித்துச் சளியினை எடுப்பதற்குப் பாவிக்கவும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஒன்று.

3.கண்ணாடித் தகட்டின் மத்திய பகுதியில் 2/3 பகுதியில் சளியினைப் பரப்பவும்

4.சளிப்படலத்தின் பரப்பு 3x2 சென்ரி மீற்றர். அதிகம் தடிப்பாகவோ மெல்லியதாகவோ இருக்கக்கூடாது.

5.உலர்த்தும் பகுதியில் வைக்கவும்.

6.காற்றில் உலர்த்துவதற்கு 15-30 நிமிடங்கள் தேவை. சுவாலையை உபயோகிக்க கூடாது.

7. முற்றாக உலர்ந்த பின் 2-3 தடவைகள் பன்சன் அடுப்பில் பிடித்து 3-5 செக்கன்களுக்கு சூடாக்கவும்.

8. சளிப்படலம் மேலிருக்க ஒழுங்காக வைக்கவும்.

9. கண்ணாடித் தகட்டின் முழுப்பகுதியையும் 1% காபோபியூசன் இடவும்.

10. கண்ணாடித் தகட்டின் ஆவி உருவாகும் வரை வெப்பப்படுத்தவும்.

11. 5 நிமிடங்களுக்கு இடைவெளிவிட்டு, சுவாலையினைப் பிடிக்கவும்.

12. சாயம் கொதிக்கவோ, உலரவோ விட வேண்டாம்.

13. எஞ்சிய சாயத்தினை ஊற்றவும்.

14. எஞ்சிய சாயத்தினை மெதுவாக ஓடும் நீரால் கழுவவும்.

15. கண்ணாடித் தகட்டினை சரித்து மேலதிக நீரினை அகற்றவும்.

16. சாயமிடும் பகுதியில் கண்ணாடித் தகட்டினை வைக்கவும்.

17. 25% சல்பூரிக்கமிலத்தினை விடவும். 3 நிமிடங்களுக்கு அப்படியே வைத்திருக்கவும்.

18. மெதுவாக ஓடும் நீரினால் மேலதிக சல்பூரிக்கமிலத்தினையும், சாயத்தினையும் அகற்றவும்.

19.சாயத்தின் சிவப்பு நிறம் அகலும் வரை இதனை மீளவும் செய்யவும்.

20. கண்ணாடித் தகட்டினை சரித்து மேலதிக நீரை அகற்றவும்.

21. மீள் சாயமிடலை 1% மெதலீன் நீலத்தை இட்டு 30 செக்கன்களுக்குள் விடவும்

22. நீரால் மெதுவாக கழுவவும்

23. கண்ணாடித் தகட்டினை சரித்து நீரினை அகற்றவும்.

24. கண்ணாடித் தகட்டினை வழியில் உலரவிடவும்.

#### ஆ. சளிப்படலத்தினை நுணுக்குக்காட்டியின் ஊடாக பார்த்தல்

1. நுணுக்குக்காட்டியினை எடுத்து அவதானமாக மேசையில் வைக்கவும்.

2. வில்லையினை அதற்குரிய கடதாசியினால் துடைக்கவும்.

3. ஏனைய பகுதியினை துணியினால் துடைக்கவும்.

4. கொன்டென்சரினை அதி உயரப் பகுதிக்கு உயர்த்தவும்.

5. X40 பார்வை வில்லையை உரிய இடத்திற்கு நகர்த்தவும்.

6. ஒளியினைச் சரிப்படுத்தவும்

7. கண்ணாடித் தகட்டினை நுணுக்காட்டியில் வைக்கவும்.

8. குறைந்த வலுவில் பார்க்கவும்.

9. வில்லையை சிலைட்டில் இருந்து விலத்தவும்.

10. அமிழ்த்தும் எண்ணெயினை சளிப்படலத்தின் இடது முனையில் விடவும்.

11.அமிழ்த்தும் வில்லையை அவதானமாக எண்ணெய் நுனியில் தொடுமாறு பதிக்கவும்.

12. ஒரு போதும் வில்லை சிலைட்டினை தொடக்கூடாது.

13.நுண்சீராக்கி மூலம் சீர்செய்யவும்.

#### இ.வாசிப்பு

1.குறைந்தது 100 நுணுக்குக்காட்டி புலன்களைப் பார்க்க வேண்டும்.

2. இடது முனையில் இருந்து வாசிக்கவும். நேராகச் சென்று, சிறிது தூரம் செங்குத்தாகச் சென்று பின் நேராகச் செல்லவும்.

3. நேர்கோட்டில் 100 பார்வைப்புலம் வரும். சளியில் கிருமி காணப்படாவிடின் குறைந்தது 300 பார்வைப்புலம் பார்க்க வேண்டும்.

4. பசிலஸ் கிருமி மெல்லிய கட்டை வடிவில் சிறிது வளைந்து காணப்படும். சிவப்பு அல்லது குங்கும நிறமாக இருக்கும். நீல பின்னணி சோடியாக அல்லது கூட்டமாக காணப்படும்.

5. பசிலஸ்சின் எண்ணிக்கையை கணக்கிடவும்.

| தரப்படுத்தல் | முடிவு/ தரம் |
| --- | --- |
| *10 பசிலஸ் (ஒரு பார்வைப்புலத்தில்)* | *3+* |
| *1-10 பசிலஸ் (ஒரு பார்வைப்புலத்தில்)* | *2+* |
| *10-99 பசிலஸ் (100 பார்வைப்புலத்தில்)* | *1+* |
| *1-9 பசிலஸ் (100 பார்வைப்புலத்தில்) சிறிதளவு* | *சிறிதளவு* |
| *பசிலஸ் காணப்படவில்லை (100 பார்வைப்புலத்தில்)* | *இல்லை* |

(தொடரும்)



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதிக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசியல் சாசனப் பேரவை நிறுவப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பிரதம நீதியரசர் அசோகா டி சில்வா, பீ.ஏ ரத்னநாயக்கா மற்றும் சந்திரா ஏக்கநாயக்க ஆகியோர் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர்.

அரசியல் சாசனத்தின் 33 ஆம் சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத்தொடர முடியாது என நீதியரசர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அடிப்படை உரிமை மீறல் மனு பிழையான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. சுமனசிறி ஜீ.லியனகே மற்றும் சுபாஷ் லவி ஜயவர்த்தன ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை அரசியல் சாசன சபையின் அனுமதியின்றி சட்டமா அதிபர் நியமிக்கப்பட்டமை அடிப்படை உரிமை மீறலாகும் எனத் தெரிவித்து மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையமும் ரொஹான் எதிரிசிங்கவும் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்துள்ளனர்.

## உள்ளூராட்சி தேர்தல் தோல்விக்கு காரணம் சிறந்த தலைமைத்துவமின்மையே

### ரோசி சேனாநாயக்க எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

சிறந்த தலைமைத்துவம் இல்லாததன் காரணமாகவேஇம்முறை உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நிலைமையை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதாக அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மக்களுக்கு வழங்கிய அறிக்கைகள் கூட இந்தத் தேர்தல் தோல்விக்கு வழி வகுத்துள்ளது.

சஜித் பிரேமதாசவுக்கு பதிலாக வேறு தலைவரை அடையாளம் காட்டும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியிருந்தார்.இதனால் சஜித் பிரேமதாசவிடம் ரணில் விக்ரமசிங்க கட்சியின் தலைமைத்துவத்தை ஒப்படைக்க போவதில்லை என்ற பலத்த சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டது.

இதன் காரணமாகவே கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் காரணமாக மக்கள் கட்சியை விட்டு மேலும்மேலும் விலகிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் சஜித் பிரேமதாசவிடம் கட்சியை ஒப்படைத்து கட்சியை முன்னேற்ற வேண்டும் எனவும் ரோசி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் பெருமளவு பக்தர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

இலங்கை, தமிழக மீனவர்கள் தமது காவல் தெய்வமாக கருதும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான புனித அந்தோனியார் ஆலய உற்சவங்களில் பங்கு கொள்வதற்காக நேற்று முன்தினம் காலை கணிசமானவர்கள் நெடுந்தீவு மாவலி துறை முகத்திலிருந்தும் குறிகட்டுவான் இறங்கு துறையிலிருந்தும் சிறு படகுகள் மூலம் அங்கு சென்றுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வருடாந்த திருப்பலி இடம்பெறுவதுடன் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

கச்சதீவு ஆலயத்துக்குச் செல்பவர்களுக்கு வசதியாக 100 உள்ளூர்ப் படகுகள் பயண சேவையை வழங்க ஏற்பாடாகியுள்ளன. சகல அடியார்களும் பாதுகாப்பு அங்கி அணிந்து தான் பயணம் செய்ய வேண்டுமென கடற்படையினர் பாதுகாப்பு அங்கியை வழங்கி வருகின்றனர். (ஸ்ரீ-2)

## பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நடாத்தப்பட்ட 2010ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை சைவநெறித் தேர்வு பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவபரிபாலன சபை பரீட்சைச் செயலர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ந-6)

## பயிற்சிப் பட்டறை பிற்போடப்பட்டது

முல்லைத்தீவு பட்டதாரிகள் மனிதவள அமைப்பு மற்றும் ஐ.டி.எம். சிற்றி கம்பஸின் ஏற்பாட்டில் இன்று நடைபெறவிருந்த தொழில் வழிகாட்டல் பயிற்சி பட்டறை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தலைவர் ச.பார்த்தீபன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகர சபை, யாழ்ப்பாணம்.



# புலிகளின் குரல் ஒலிபரப்புச் சேவையில் அரச தொலைக்காட்சி ஒளிபரப்பு

(கொழும்பு)

புலிகளின் குரல் ஒலிபரப்புச் சேவை ஒலிபரப்பாகி வந்த கொக்காவில் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் ஒரு நிறுவனமான வசந்தம் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை நடத்த ஆரம்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து கொக்காவில் பிரதேசம் கைப்பற்றப்பட்ட பின்னர் பாதிக்கப்பட்டிருந்த கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுரம் 270 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

இன்று இலங்கையின் மிக உயரமான தொலைத்தொடர்பு கோபுரமாகக் கருதப்படும் இக்கோபுரத்தின் உயரம் 172 மீற்றர்களாகும்.

இக்கோபுரத்திலிருந்து வசந்தம் தொலைக்காட்சி தனது சேவைகளை கடந்த 17 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்துள்ளது. இத்தகவலை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை அரச படைகள் வசமிருந்த கொக்காவில் முகாமை தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 1990 ஆம் ஆண்டு மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மூலம் கைப்பற்றியிருந்தனர்.

இதேவேளை, கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் செயற்பட்ட புலிகளின் குரல் வானொலி நிலையத்தின் நடுவப் பணியகத்தில் தற்போது பாரிய படைமுகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலில் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும்

## ஐ.தே.க வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. தேவை ஏற்படும் போது எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலில் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பல உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரம் பறிபோயுள்ளதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார். எனினும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலை விடவும் ஐந்து வீதமான வாக்குகள் கூடுதலாகக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 29 வீதமான வாக்குகள் கிடைக்கப் பெற்றதாகவும் இவ்வாண்டில் 34 வீதமான வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அநேகமான பிரதேசசபைகள் சிறிய இடைவெளியில் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளமையை ஒப்புக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


# வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைத் துறைசார்ந்த வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பணியாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். (யாழ். மாவட்டத்திற்குள்)

- சந்தைப்படுத்தாளர்கள்/ விற்பனையாளர்கள் (Marketers/ Sale's Reps) இருபாலரும்.
  - கல்வித் தகைமை G.C.E. A/L Pass.
  - மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம். இருபாலார்களுக்கும் பொருந்தும்.
  - மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
  - Fair & Handsome ஆக இருத்தல் விரும்பத்தக்கது.
  - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
  - வயது எல்லை 22-28 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  - கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வரவேற்பாளர் (RECEPTIONIST) பெண்.
  - மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
  - மிகவும் அழகானவராயும் மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம்.
  - குறைந்தது 1-2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
  - கல்வித் தகைமை G.C.E. A/L Pass.
  - வயது எல்லை 22-28இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- அந்தரங்க காரியதரிசி (PERSONAL SECRETARY) பெண்
  - வர்த்தகத் துறை சார்ந்த பட்டதாரியாக இருத்தல் விரும்பத்தக்கது.
  - நிறுவனம் சார்ந்த வேலைகளில் மிகவும் இரகசிய தன்மை பேணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
  - மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராகவும் மிகவும் சரளமாகப் பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
  - கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - வயது எல்லை 25-35 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  - மும்மொழியில் கடிதங்கள், மின்னஞ்சல்கள் உட்பட அனைத்து வேலைகளையும் கணனியில் அதிவிரைவாக செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - மிகவும் அழகானவராயும் மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம்.
- Computer Technician (Hardware & Networking) இருபாலாரும்
  - துறையில் முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
  - கல்வித் தகைமை G.C.E. A/L or O/L Pass
  - மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
  - வயது எல்லை 20-28 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  - கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய Colour Pass Port Size (மிக முக்கியம்) புகைப்படத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் துறையை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம். நேரம் என்பன குறுஞ் செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும்.

விளம்பரம் பிரசுரித்த திகதியில் இருந்து 7 வேலை நாட்களுக்குள் விண்ணப்பங்கள் யாவும் வந்து சேரவேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

**# 138, Kanagaratnam Road, Ariyalai,**
**Jaffna. 40,000,**
**Sri Lanaka.**

(2733)


# சைப்பிரசில் இலங்கைப்பெண் கொலை; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

சைப்பிரஸ் நாட்டின் லிமாஸோல் நகரில் பன்றிப் பண்ணையொன்றில் இலங்கைப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரை 8 நாட்களுக்கு விளக்கமறியல் வைக்குமாறு லிமாஸோல் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

35 வயதான இச்சந்தேக நபரும் இலங்கையைச் சேர்ந்தவர் ஆவார்.

37 வயதான மேற்படி பெண் அவர் வேலை செய்த மேற்படி பண்ணையில் சீமெந்து கல்லுடன் பிணைக்கப்பட்ட நிலையில் கழிவுநீர் ஏரியொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அப்பெண்ணை தான் கொலை செய்யவில்லை என சந்தேகநபர் தெரிவித் துள்ளார். சந்தேக நபர் மேற்படி பெண்ணிடம் கடந்த வருடம் ஆயிரம் யூரோ கடன் வாங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவற்றில் 750 யூரோவை அவர் திருப்பிக் கொடுத்துள்ளார். மிகுதித் தொகையை அப் பெண் தொடர்ச்சியாக கேட்டு வந்துள்ளார் என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த 3 தொடக்கம் 12 ஆம் திகதிகளுக்கிடையில் இறுதியாக இப்பெண் உயிருடன் காணப்பட்டுள்ளார். இவ்விருவருக்கும் இடையில் மேற்படி பணம் தொடர்பாக வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண்ணுக்கு மேற்படி சந்தேக நபருடன் மாத்திரமே தனிப்பட்ட முரண்பாடு காணப்பட்டது என லிமாஸோல் பொலிஸார் இலங்கையிலுள்ள மேற்படி பெண்ணின் சகோதரருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவ்விசாரணைகள் தொடர்வதாகவும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்.)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச்சுகாதர பிரிவு பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30மணிவரை அண்ணாசிலைச் சந்தியில் வைத்து வழங்கப் படவுள்ளது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதர வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)



மகளிர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற "வனிதா வாசனா" சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட திருமதி பி.தயானி வாடிக்கையாளர் ஒருவருக்கு சேமிப்புச் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் வங்கி முகாமையாளர் ஆர். யோகராஜா, உதவி முகாமையாளர் திருமதி றொசற் தவநாயகம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததைச் சாதியுங்கள்!

'ஆசைகொள்ளாதே!' என்று புத்தர் சொன்னார். ஆனால் நீங்களோ 'அத்தனைக்கும் ஆசைப்படு' என்று சொல்கிறீர்கள்! ஏன் இந்த முரண்பாடு? என்று என்னிடம் பலர் கேட்கிறார்கள்.


தன் வாழ்நாளில் அத்தனை மனிதர்களுக்கும் ஞானம் கொடுத்து விட வேண்டும் என்று ஆசைப்பட்ட புத்தரா, மற்றவர்களை ஆசைப்பட வேண்டாம் என்று சொல்லி இருப்பார்? ஒருக்காலும் இருக்காது!

உங்கள் ஆசைகள் மிகப் பெரியதாகவே இருந்து விட்டுப் போகட்டும். அவற்றை அடைய நீங்கள் நூறு சதவிகித ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். கவனத்துடன் ஆசையைக் கையாண்டால் நினைத்ததைச் சாதிக்கலாம்!

ஆசை என்பது துன்பமில்லை. அதைப்பற்றிய அறியாமைதான் துன்பம். இதைப்புரிந்து கொள்ளாமல், அந்த ஆசையை ஒரு வியாபாரத்தின்மீதோ, மண்ணின் மீதோ, அடுத்தவர்மீதோ, ஆன்மீகத்தின்மீதோ, அதிகா ரத்தின் மீதோ அடையாளப் படுத்திப் பார்த்தால் நிறைவு வராது. அதிருப்தி தான் மிஞ்சும்.

இந்த அறியாமையை எப்படிக் களைவது?

முறையான யோகாவின் மூலம் குறுகிய எல்லைகளை உடைக்க முடியும்.



பேரானந்தத்தை ருசித்துப் பார்க்க முடியும். உங்கள் உச்சபட்ச சக்தியை உயிர்ப்பித்து விட்டால், அப்புறம் வியாபாரமோ, குடும்பமோ, ஆன்மீகமோ எதை வேண்டுமானாலும் உட்காயம் இல்லாமல் முழுமை யாக விளையாடிப் பார்க்க முடியும்.

உள்ளுணர்வில் இந்த அனுபவம் கிடைக்கும் வரை, வெளியிலிருந்து சேகரித்த திறமைகளை மட்டுமே வைத்து விளையாட முடியும்.

ஆசைப்பட்டதில், உங்கள் திறமைக்கு ஏற்றவைதான்கிடைக்கும். ஆனால், ஆசையோடு நீங்கள் செயலாற்றத் தொடங்கிவிட்டால், அதுவே உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வரும். தோற்றாலும் துன்பம் வராது.



கிடைத்த ஆயிரம் விடயத்தை மறந்து விட்டு, கிடைக்காத ஏதோ ஒரு விடயத்துக்காகத் தற்கொலை செய்து கொள்வது போன்ற முட்டாள்தனமான எண்ணங்கள் ஒருபோதும் உங்களை நெருங்காது.

எல்லோருக்கும் ஒரே அளவு பணமோ, பதவியோ, அதிகாரமோ , வசதியோ கிடைப்பது வேண்டுமானால் சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் உள்ளுணர்வில் ஒரே அளவு ஆனந்தம் கிடைப்பதை யார் தடுக்க முடியும்?

ஆசையின் அடிப்படையை புரிந்து கொண்டவர்கள்தான் இந்த வியா பாரம் வேண்டும்,இந்த வீடு வேண்டும், இந்தப் பெண் வேண்டும் என்று குறுகிய வட்டத்துக்குள் அடங்கிப் போகும் அற்ப ஆசைகளை வளர்த்துக்கொள்வார்கள்.

அப்படி, ஏதோ குறிப்பிட்ட ஒன்றுக்கு மட்டும் ஆசைப்படாமல், அத்தனைக்கும் ஆசைப்படவேண்டுமென்றால்,அதை முழுமையான கவனத்துடன் மட்டும்தான் செய்ய வேண்டும். அப்படி முழுமையான கவனத்துடன் வாழத் தொடங்கி விட்டீர்கள் என்றால், எதையும் உங்களுடையது என்று சொந்தம் கொண்டாடுவதை விட்டுவிட்டு, எல்லாமே நீங்கள்தான் என்று உணர்ந்து கொள்ள முடியும்.

அதனால்தாசு, அத்தனைக்கும் உங்களை ஆசைப்படச் சொன்னேன். கவனத்துடன் அத்தனைக்கும் ஆசைப்பட்டால், உங்கள் வாழ்க்கையைப் பூரணமாக உங்கள் விருப்பப்படி

**ஆன்மீகம் 50**

அமைத்துக் கொள்ள முடியும்!

ஆசைவிரிவடைந்து விரிவடைந்து பிரபஞ்சத்தையே உள்ளடக்கிக் கொள்ளும் தருணம் வந்ததும், பேரானந்தத்தை நீங்கள் ருசிக்கமுடியும்.

புத்தருக்குக் கிடைத்த ஞானம், எனக்குக் கிடைத்த ஆனந்தம் இங்கே இருக்கும் ஒவ்வொருவருக்குமே சாத்தியம்!

எனவே, அத்தனைக்கும் ஆசைப்படுங்கள்!

ஆசிகளுடன்.

♠ ♠ ♠

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

**15**



அருள் சுப்பிரமணியத்தின் 'அக்கரைகள் பச்சையில்லை' என்ற நாவல் 'ஆனந்த விகடன்' நாவல் போட்டியில் முதற் பரிசினைப் பெற்று.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஈழத்துப் படைப்பாளிகளின் ஆற்றலை நிரூபித்தது.பின்னர் அது போட்டி விதிகளுக்கு உட்படவில்லையெனத் தவிர்க்கப்பட்டது. அவர் பின்னர் ஆனந்தவிகடனில் எழுதிய 'சூரசம்ஹாரம்' அவருக்குப் பெருமை சேர்த்த ஒரு நாவல். 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' அவருக்குப் பெருமை சேர்த்த சிறப்பான நாவல்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி ஏராளமான புனைகதைகளுக்கு முன்னுரை வழங்கியுள்ளார். தன் திறனால் அந்நூல் குறித்து பூசிமெழுகி விடுவார். அந்நூலைச் சிறப்பாக விதந்துரைக்கிறாரா இல்லையா? என்பதைக் கண்டுணர்வது கஷ்டம்.

ஆனால் இந்த நாவல்களுக்கு மட்டும்தான் தனக்கு அப்படி ஒரு இடர்பாடு நேரவில்லை எனத் திரிகரணசுத்தியுடன் ஒப்புக் கொள்கிறார். இவருடைய படைப்பில் வியக்கத்தக்க முதிர்ச்சியும் ஆக்கத்திறனும் காணப்படுவதாக பேராசிரியர் வியக்கிறார். தமிழ் இளைஞன் ஒருவன் சிங்களப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்து கொள்ள நேர்வதனால் உருவாகின்ற சிக்கலையும் இரு இனங்களுக்கிடையிலான உறவு நிலைகளையும் இந்த நாவல் சித்திரிக்கின்றது. டானியலின் முருங்கையிலைக்கஞ்சி, சாந்தனின் ஒட்டுமா?, செங்கை ஆழியானின் தீம்தரிகிடதித்தோம் என்பன இவ்வாறான உறவு நிலைகளைச் சித்திரிப்பினும் சுப்பிரமணியத்தின் நாவல் முற்றிலும் வித்தியாசமானது.

'அரியம், முத்தர், மொணிக்கா, மொணிக்காவின் தாய், மாஸ்டர், சிவபாதம் யாவருமே இயற்கையான சூழ்நிலையில் பேசுகின்றனர், மோதிக் கொள்கின்றனர். தீர்மானங்கள் எடுத்துக்கொள்கின்றனர். நாவலின் இச் சிறப்பே நாவலாசிரியரின் ஆக்கத் திறனுக்கு சாட்சியாக அமைகிறது. அவரின் பாத்திரவார்ப்புத்திறன் அவதானிக்கும் பண்பு, கதைசொல்லும் பாங்கு என்பனவே நாவலாசிரியன் என்ற வகையில் அருள் சுப்பிரமணியத்தின் கவனிக்கப்படத்தக்க சிறப்புக்கள்' என்கிறார் பேராசிரியர். சிங்கள - தமிழ் உறவுகளைச் சித்திரிப்பதில், குறிப்பாகச் சிங்களவர்களைப் பற்றித் தமிழர் கொண்டுள்ள கருத்துக்களை ஒழிவு மறைவின்றிச் சித்திரிக்கின்றார்.இந்த நாவல் தேசிய ஒருமைப்பாட்டைச் சித்திரிப்பதாகக் கருதுகின்றார். சிங்கள-தமிழ் மக்களது உறவு நிலைகள் இறுக்கமடைந்துள்ள இக்காலகட்டத்தில் இனம் மாறிய திருமண உறவுகள்எவ்வளவு தூரம் இன ஒற்றுமைக்கு உதவும் என்பது ஐயமே.

நாடறிந்த படைப்பாளிகளில் ஒருவரான தெணியான் 1973இல் எழுதிய நாவல் 'விடிவை நோக்கி' ஆகும். கழுகுகள், பொற்சிறையில் வாடும் புனிதர்கள், மரக்கொக்கு, காத்திருப்பு, கானலில்மான், சிதைவுகள், பரம்பரைஅகதிகள், பனையின்நிழல் என்னும் நாவல்களைப் பிற்காலத்தில் எழுதினார். அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக இலக்கியம் படைக்கும் தெணியான், சாதியம் வர்க்கியம் ஆகிய உணவுகள் இப்புனைகதைகளில் மிக்கு நிற்கின்றன. குடும்ப உறவுகளை மென்மையான இறுக்கத்துடன் பிணைத்து எழுதுவதில் அவர் வல்லவர். யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றில் சாதியப் பிரச்சனைகளால் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளின் கல்வியில் ஏற்படும் மனிதாபமற்ற தடைகளை விடிவை நோக்கி என்ற நாவலில் விபரிக்கின்றார். 'உரிமைகளைப் பெறும் போராட்டங்களில் இரு தரப்பினரிடமும் மனிதாபிமானமும் நிதானமும் செயற்படாமை ஆசிரியரின் இந்நாவலில் முக்கிய அம்சமாகிறது'. கல்வி கற்பிக்கும் ஆசிரியர் அப்பாடசாலையில் சாதியப் பாகுபாட்டால் எதிர் கொள்ளும் சங்கடங்களும் அவமானங்களும் காட்டப்பட்டுள்ளன.

செ.கணேசலிங்கன் போன்றோர் கே. டானியல் போன்றோர் கோட்பாட்டு முறையாக சாதியத்தை அணுகாமல் இயல்பான பிரதேச யதார்த்தமாகவும் சமுதாயவிமர்சனப் பார்வை கொண்டதாகவும் விடிவை நோக்கி அமைகின்றது.

1970-1980 கால தசாப்தத்தில் வெளிவந்த ஈழத்து நாவல்களில் 1973இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த 'நிலக்கிளி' தனித்துவம்

**கலாநிதி செங்கைஆழியான்**
**க.குணராசா**

பெறுகின்றது. அதனால் பலரதும் கவன ஈர்ப்புக்குள்ளாகியது.

1. ஈழத்தில் முதன் முதல் வன்னிப் பிரதேசத்தை நாவலிலக்கியத்துக்குரிய களமாகத் திறந்து விட்டது. முள்ளியவளை தண்ணியூற்றுக் கிராமத்தை அதன் உயிரோடு அறிமுகம் செய்து வாசகனுக்குப் புதியதொரு தெரியாத களத்தை அறிமுகப் படுத்தியது.

2.ஈழத்தின் பட்டினங்களைச் சுற்றி வந்த நாவலிலக்கியத்தை பிரதேச நாவலின் முதல் தோற்றத்திற்கு வழி திறந்து விட்டது.

3.அக்களத்திற்கேயுரிய சொற் களஞ்சியத்தை வெளிக் கொணர்ந்தது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருசன் நூலகம்
ஆவணத்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.






ஹற்றன் நஷனல் வங்கி (HNB) 2010-ம் ஆண்டின் 'சிறந்த சில்லறைவங்கி' எனஆசிய வங்கியாளரின், 10-வது சர்வதேச வினைத்திறன் சில்லறை நிதிச்சேவை விருது வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினால்தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருது வழங்கும் விழா கடந்த 11-ம் திகதி கோலாலம்பூரில் நடைபெற்றது. 29 நாடுகளில் இருந்து 150 மூத்த வங்கியாளர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில், 'Best Retail Bank' விருதை பெற்றுக் கொண்ட எச்.என்.பியின் தனியாள் நிதிச் சேவை உதவி பொது முகாமையாளர் பி.சிறிதரன் (மத்தியில்), ஆசிய வங்கியாளர் சில்லறை நிதிச்சேவை நிகழ்ச்சித்திட்ட தலைவர் கிறிஸ்ரியன் கபீர் (இடது), சிங்கப்பூர் டிபிஎஸ் வங்கியின் முன்னாள் பிரதித் தலைவர் மற்றும் ஸ்ராண்டட் ஸ்ராட்டட் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிலிப் பில்லாட் (வலது) ஆகியோருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

## அரச பிணையங்கள் மூலம் ரூ.118 பில்.; ப.சந்தை மூலம் ரூ.17.5 பில். இலாபம்

# ஊ.சே.நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2010-ல் ரூ.900 பில்லியனை அடைந்தது

## இந்த ஆண்டு ரூ.ஒரு ட்ரில்லியன் இலக்கு

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 2010-ம் ஆண்டு செயற்றிறன் மிக்க ஆண்டாக அமைந்தது. கடந்த வருடத்தில் உறுப்பினர்களின் உதவு தொகைகள் 12.5 சதவீதத்தால் உயர்ந்ததுடன், நிதியத்தின் செயற்படுநிலையிலுள்ள உறுப்பின்ர்களின் எண்ணிக்கையும் 5 சதவீதத்தால் அதிகரித்தது.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட அதிகரித்த தொழில் வாய்ப்புக்களையே இதுபிரதிபலிக்கிறது எனஊழியர்சேமலாப நிதியம் தெரிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு உறுப்பினர்களின் உதவுத்தொகையாக ரூ.54.8 பில்லியனைப் பெற்றதுடன், உறுப்பினர்களுக்கும் அவர்களின் சட்டரீதியான வாரிசுகளுக்கும் மீளளிப்புக்களாக ரூ.34.9 பில்லியனைச் செலுத்தியது. நிதியத்தின் மொத்த வருமானம் ரூ.121.3 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீதம் உயர்வடைந்தது.

இதன்படி நிதியங்களில் 94 சதவீத்திற்கும் அதிகமானவை அரச பிணையங்களில் முதலிடப்பட்டமையால் வட்டி வருமான, கடன் தீர்ப்பனவு இலாபங்கள் ஆகியன நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலங்களாக விளங்கின. 2010இல் சேலாப நிதியம் அரச பிணையங்களிலான அதன் முதலீடுகளிலிருந்து ரூ.118 பில்லியனைச் சம்பாதித்தது.

அத்துடன் கொழும்பு பங்குச் சந்தையில் ஊ.சே.நிதியம் 2010-ல் ரூ.32 பில்லியனை முதலீடு செய்தது.எனவே 2009 இறுதியில் மொத்த ஊ.சே.நிதிய சொத்துப்பட்டியலில் 1.3 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பங்கு முதலீடுகள் 2010 இறுதியில் 5சதவீத்துக்கு அதிகரித்தன.

வங்கித்தொழில், நிதி, காப்புறுதி, சுற்றுலா விடுதி மற்றும் பயணம் போன்ற துறைகளின் பங்குகளில் நிதியம்முதலிட்டது.இதன்விளைவாக, ஊ.சே.நிதியம் ரூ.1.5 பில்லியனுக்கும் அதிகமான, பணமாக்கககூடிய இலாபங்களைப் பெறக்கூடியதாக இருந்த வேளையில், அதன் பங்கு முதலீடுகளிலிருந்து ரூ.16.2 பில்லியனைப் பணமாக்க முடியாத இலாபமாகப் பெற்றுக் கொண்டது.

2010ஆம் ஆண்டின் இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.900 பில்லியனை அடைந்தது. இது 2009-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.9 சதவீத வளர்ச்சியாகும்.

அதேவேளை, ஆண்டு இறுதியிலுள்ள உறுப்பினர் நிலுவைகளுக்கு 12.5 சதவீதம் கொண்ட வட்டி வீதத்தை வழங்கக்கூடியதாகவும் இருந்தது. இந்தப் பின்னணியில் 2011-ல் நிதியத்தின் மொத்தப் பெறுமதி அதன் முதலீடுகளிலிருந்தான வருமானம் மற்றும் உறுப்பினர் உதவுத்தொகை என்பவற்றின் ஊடாக ரூ.1,000 பில்லியனை (ரூ.1 ட்ரில்லியன்) தாண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

CENTRAL BANK OF SRI LANKA
EMPLOYEES' PROVIDENT FUND

## பங்கு முதலீட்டாளர்களுக்கு பங்குப்பரிவர்த்தனையின் அறிவிப்பு

2011-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அனைத்துப் புதிய பங்குவழங்கல்களும் (IPO) இலத்திரனியல் முறைமைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆரம்பப் பங்கு வழங்கல்களின் போது விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மத்திய வைப்புத்திட்ட கணக்கினை(CDS A/C) கொண்டிருப்பதுடன் விண்ணப்பப் படிவத்தில் சிடிஎஸ் கணக்கிலக்கத்தினை குறிப்பிடுதல் வேண்டும்.

இதேவேளை, 2011-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பட்டியல்படுத்தப்பட்ட அனைத்துக் கம்பனிகளினதும் பிணைப்பத்திரங்கள் அதாவது பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் பிணையங்களைக் கொண்டுள்ளவர்கள் தமது காதித வடிவிலான பிணையங்களை மத்திய வைப்புத் திட்டத்தில் உள்ள தமது பிணையங்கள் கணக்கில் பதிவு செய்வதன் மூலம் இலத்திரனியல் பிணையங்களாக மாற்றிக் கொள்ள முடியும். பங்குதாரர்கள் இச் செயலொழுங்கினை 2012-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்தாக வேண்டும் என கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அறிவித்துள்ளது.




## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.57 | 111.31 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.28 | 180.51 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.17 | 157.49 |
| சுவிஸ் பிராங் | 119.73 | 124.01 |
| கனேடிய டொலர் | 110.61 | 114.30 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.81 | 111.47 |
| சிங்கப்பூர் டொலர் | 85.43 | 87.97 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.04 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையின் நாளாந்த புரள்வு ரூ. 4.6 மில்லியன்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளை கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது முதல் அதன் செயற்றிறன் சிறப்பான முறையில் அதிகரித்து வருவதாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 2010-ம் ஆண்டு சராசரி நாளாந்த புரள்வு 2.6 மில்லியனாக காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டு பெப்ரவரி முடிபில் புரள்வு ரூ.4.6மில்லியனாக அதிகரித்துள்ளது. இதேபோல் கடந்த ஆண்டு முழுவதும் 640 மத்திய வைப்புத் திட்டகணக்குகள்(CDS A/C) ஆரம்பிக்கப்பட்டன.ஆனால் கடந்த பெப்ரவரியில் 427 சிடிஎஸ் கணக்குகள் அதாவது இந்த ஆண்டு மட்டும் 1,067 க/குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

**விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டம்**

இதேவேளை இது குறித்து கருத்து தெரிவித்த கொ.ப.பரிவர்த்தனை யாழ்.கிளை முகாமையாளர் மு.திலீபன்,

நிதிச்சந்தை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது. பாடசாலைகள், உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழில் நிறுவகங்கள் தமது மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மூலதன சந்தை தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொடுக்க விரும்பின் 398/1,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொ.ப.பரிவர்த்தனை யாழ்.கிளை அலுவலகத்துடன் அல்லது 0212221455 என்ற தொலைபேசி இலக்க மூலமோ தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யலாம். அல்லது ப.பரிவர்த்தனைக் கிளைக்கு நேரடியாக வருகை தருவதன் மூலம் பங்குச்சந்தையின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்ற அநுபவ அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் திலீபன் மேலும் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7313.02 | 7184.94 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6822.16 | 6691.60 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 7,130.38 | |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** அஸ்கொட் கோல்டிங் (108.80), ரீ சேவிஸஸ் (860.00), ஹெஸ்னர் (119.00), லங்கிம் டெவலப்.(69.60), சி.டி.ஐ.சி. (188.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஈஸ்ட் வெஸ்ட் (10.90), ஈ பி கிரேஸி (2404.50), யூனியன் கெமிக்கல் (515.00), சிகிரியா விலேஜ் (100.10), சிங கபுத்திர பினான்ஸ்(90.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## பிறீ லங்கா ஐ.பி.ஓ மிகைக்கேள்வியுடன் முடிவு

தலா ரூ.5 வீதம்300 மில்லியன் பங்குகளை வழங்கிய, பிறீ லங்கா கப்பிற்றல் ஹோல்டிங் லிமிட்டட் ஆரம்ப பங்கு வழங்கல் ஆரம்பமாகிய நாளான கடந்த 17-ம் திகதியே மிகைக் கேள்வி ஏற்பட்டதையடுத்து மாலை 4.30 மணியுடன் முடிபுக்கு வந்தது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் நிதி- நீர்மின் திட்டம், ஹோட்டல் அபிவிருத்தி மற்றும் கொழும்பில் வர்த்தகத் தொகுதி அபிவிருத்தி ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

விரைவில் பங்கு ஒதுக்கீடு தொடர்பான விபரம் அறிவிக்கப்படும்.

## ஹில்டன் ஹோட்டலை வாங்க முயற்சி

Hilton Colombo

கொழும்பு ஹில்டன் ஹோட்டலை கொள்வனவு செய்வது குறித்து இந்தியாவின் மிகப்பெரிய கசினோ நிறுவனமான டெல்டா குரூப் கலந்தாலோசித்து வருகிறது. 500 அறைகளைக் கொண்ட 5 நட்சத்திர விடுதியான ஹில்டன் 110 மில்லியன் டொலர் பெறுமதியுடையது என கணக்கிடப்பட்டுள்ளது. இக் ஹோட்டலை அரசு கொள்வனவு செய்ததாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## கச்சா எண்ணெய் 103 டொலராக உயர்வு

ஜப்பானில் அணு கதிர்வீச்சு அபாயம் மற்றும் வளைகுடா நாடுகளில் காணப்படும் பதற்ற நிலை ஆகியவற்றால் ஆசிய சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்த வண்ணம் உள்ளது. நியூ யோர்க்கின் முக்கிய கன்ராக்டில் ஏப்ரல் மாத விநியோக கணக்கின் படி கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 1.65 டொலர் அதிகரித்து 103.07 டொலர்களாக உள்ளது.




கொழும்பில் இருந்து மாத்தறை வரை (126 கிலோ மீற்றர்) அமைக்கப்படும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் யூலை மாதம் திறக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் ஏ.டபிள்யூ .ஆர். பிரேமசிறி தெரிவித்தார். இவ்வீதியில் பொது போக்குவரத்து சேவைகள் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 11 இணைப்புச்சந்திகளூடாகவே மேற்படி வீதிக்கு பிரவேசிக்கவோ அல்லது வெளியேறவோ முடியும்.

இவ்வாறான வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ,கடற்கரையோரமாக யாழ்ப்பாணம் -மன்னார் -புத்தளம் ஊடாக கொழும்புக்கு அமைக்கப்படுமாயின் 3 மணி நேரத்திற்குள் வாகனங்கள் கொழும்பை சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### இறுதிவரை...

மழை வந்தால்
குடையாக...
குளிரடித்தால்
துப்பட்டாவாக...
உஷ்ணத்தின் போது
விசிறியாக...
என்றும் உனக்கு
துணையாக நிற்பேன்
நீ உயிர்விடும்
தருணம் வந்தால்
அன்றே நான்
உன்னோடு இறப்பேன்

கதிர்
நெடுந்தீவு

### முடிவுகள்...

தென்றலைத் தூது
வினாவினேன்
காறும் நாற்றப் பதில்
கிடைத்தது
தாலாட்டின் தாய்மடி
இரந்தேன்
தடியடி கிடைத்தது
விடி வெள்ளியிடம்
என் எதுதிசை
எதுவென்றேன்
இதுதான் உலகமும்
வாழ்க்கையும்...
தத்துவம் பேசியது!

துஜீவ்

### கவிதைத் துளிகள்

**வறுமை**
கண்களை நனைத்து
உடலை வாட்டி
இன்பம் காணும்
இறைவனின் விளையாட்டு

**உயிர்**
தன்னை அறியாது தன்னையே
அழிக்கும் எழுதுகோல்

**உடல்**
மண்ணுக்கே மட்டும்
சொந்தமான பொருள்

**ஆவி**
உடலை விட்டுப் பிரிந்தாலும்
மண்ணிலே வாழும்
கற்பனை ஜீவன்

து-ஆதவன், சிறுப்பிட்டி மேற்கு.

### வெற்றிக்கு வழி

சிறகுகள் பாரமென்று
பறவைகள் நினைத்தால்
வாழ்க்கையின் பாதைகள்
விண்ணை முட்டியிருக்காது
தோல்விகள் பாரமென்று
இதயம் நினைத்தால்
வெற்றியின் சிகரங்கள்
கண்களுக்கு புரியாது

ஸிந்தா.வி
வடகோப்பாய்.

### இமயம் தொட...

எப்போது உன் தவறுகளை
மறைத்துவிட நினைக்கிறாயோ
அப்போதே-நீ
மனித பண்பிலிருந்து
விலகிவிடுகின்றவனாகின்றாய்
திறமை கோடியுண்டேனும்
நேர்மை தவறின்
வெற்றிகளும் வேதனமும்
உன் கைநழுவிச் சென்றுவிடும்

மாவை. நா.கஜேந்திரா

### ஏக்கத்துடன்...

படித்தோம் பட்டம்
பெற்றோம்
பாரினில் உயரவென
கடைசியில் என்ன?
காத்திருப்புத்தானே...

ம.சர்மலா,
யா/டிறிபேக் கல்லூரி

### அகல்விளக்கு

இருண்ட யுகங்கள்
இனியும் வேண்டாம்
இம்சை வதைப்பும்
இங்கே வேண்டாம்
அகிம்சை தரிக்க
ஆயுதம் வேண்டாம்
அன்பது நிலைக்க
வன்மங்கள் வேண்டாம்
அகிலம் சிறக்க
ஆன்மீகம் வேண்டும்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### காகிதம்

பிரிந்த உறவுகளின் இதயங்களை
மகிழ்ச்சிப்படுத்தும் வெள்ளைத் தாள்

க.கலையரசி, துணவி

### காத்திருப்பு

கரைந்து போன
நிமிடங்களில்...
உடைந்து போன
கனவுகளாய்...
சிதறிப்போன இதயத்தை
சரிசெய்யவென—உன்
வரவை பார்த்திருக்கும்
என் விழிகள்

எஸ்.ரிஷிகேஷன்

### என் பயணத்தில்...

அவன் பார்வைகளால்தான்
நான் பரவசமடைகிறேன்
என்னை உரிமையோடும்
உணர்வுகளோடும் நேசிப்பவன்
காத்திருப்பதனால் என்னவோ...?
கடிந்து கொள்வதும்
நானாய் அவனும்
அவனாய் நானும்
கலந்திருப்பதனால்தான்
என் அத்தனை
சந்தோஷங்களின் வடிவமாய்...
என் வெற்றிகளின் ஏணிகளாய்...
என் விசும்பல்களின் தோழனாய்...
என் கனவுகளில் இரவாய்
அவன்...!
இனிக்கிறது நம் உறவு...

எஸ்.ஜிந்துஜா, கோண்டாவில்



## மௌனத்தின் தேடல் – 62

### காலம் செய்த கோலம்

காலம் செய்த கோலம்
இதுவென
கண்ணீர் விடுவதா?
கண்மணிகளுக்கு
கிடைக்க வேண்டிய
அரவணைப்பு
கைமாறியதை நினைத்து
வருந்துவதா?
எதுவும் புரியவில்லை
இந்த கலியுகத்தில்...!

செ.ரவிசாந், குப்பிளான்

### உண்மை அன்பு

ஐந்தறிவு ஆறறிவு
என்ற பாகுபாடு
அன்புக்கும் கருணைக்கும்
இல்லை

வி.ஜதுஷன்
மண்பிட்டி

### நீயுமா?

தெருவில் நடக்கிறதை
தோளில் சுமக்கிறாய்
தோளில் சுமக்கிறதை
தெருவில் நடக்க விடுகிறாய்
உன் மனிதம் எங்கே...?

கோ.குமுதினி
மறவன் புலோ

### வேடிக்கை

நாகரிகம் கெட்டு
குட்டுச்சுவராகிவிட்டது
நாய்க்குட்டிகளுக்கு
இருக்கும் மரியாதை
மனிதக்
குழந்தைகளுக்கு
இல்லாது போனதேன்

வே.வே.அகிலேஸ்வரா
மருதங்கேணியூர்

### ஏன் தயக்கம்

ஐந்தறிவு ஜீவனுக்கு
பாசம் காட்டும்– பெண்ணே
உன் ஆறறிவு குழந்தையை
மறு தோளில் தூக்கிச் செல்லாயோ?

அ. சுஜானி, கைதடி மேற்கு

### அபூர்வ அன்னை

அவசர உலகில்
அஃறிணை
உயிர்களையும்
அரவணைக்கும்
அபூர்வ அன்னை!

எஸ்.காவியா
வடமராட்சி

### சுமைகள்

அன்பு மழலை
கண்ணீர் நடையில்
ஆசைப் பிராணி
களிப்புடன் தோளில்
இதயங்கள் பல
இப்படியும் வாழ்வில்

தங்கத் தமிழன்
காரைநகர்.

### தாய்க்குலம்

கால் வலிக்க
பிள்ளை நடக்க
நீ நடக்கிறாய்
மிருகத்தை
சுமந்து கொண்டு...

உமிரோவியன்

### விடியலைத் தேடி...

சுதந்திரத்தின் தேடலில்
சுமை ஏறிய சோகமுடன்
விடை காணாத வாழ்வில்
விடியலைத் தேடி....

வீ.வினிஸ்
சாந்தை, கல்வி. வ. கழகம்

### கலியுகம்

தாய் பெற்ற பிள்ளை
தரையிலே
நாய் பெற்ற பிள்ளை
தோளிலே

சி.காயத்திரி
சண்டிலிப்பாய்.

### இரக்கமில்லாப் பேய்

தான் பெற்ற சேயை
அழுது கொண்டு நடக்கவிட்டு
நாயை மட்டும் தோளிலிட்டு
நாகரிகப் பெண்ணாக
நடக்கும் இவள் தாயல்ல
இரக்கமில்லா....

துரை,
தென்மட்டுவில்

### நிலை மாற்றம்

தோளில் கிடப்பது
தரையில் நடக்கிறது
தரையில் நடப்பது
தோளில் கிடக்கிறது
மழலையின் அழுகை
தாய்மைக்கு
கேட்கவில்லையோ?

சீதா
யாழ். பல்கலைக்கழகம்

### பிணைப்பு

நாய் பெற்ற பிள்ளை
கழுத்தில் கிடக்க
தாய் பெற்ற பிள்ளை
நிலத்தில் நடக்க
தொடரும் உன்
பயணம் ஏன்?

எஸ்.ஜே.கீர்த்தனன்
பருத்தித்துறை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 63



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 25.03.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் வதிவிடக் கருத்தரங்கு நேற்று இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராஜேந்திரன் உரையாற்றுவதனையும் வளவாளர்கள் அமர்ந்திருப்பதனையும் மாணவர்களின் பரத நாட்டிய பயிற்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

(நேற்றைய தொடர்ச்சி)

**15 வயதின் கீழ் ஆண்கள்**

**100 மீற்றர்**

எஸ்.கோவர்த்தனன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.கோகுலன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.வினோஜ் (யா/பெரிய புலம் ம.வி.)

**நீளம் பாய்தல்**

கே.நிதுசன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தி), பி.சர்மிலன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.பௌத்திரன் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி)

**ஈட்டி எறிதல்**

எம்.ரகுராஜ் (யா/முத்துத்தம்பி ம.வி.), கே.சுதாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.இந்துசன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**4x100 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, யா/பெரியபுலம் ம.வி., கொக்குவில் இந்துக் கல்லூரி

**17 வயதின் கீழ் ஆண்கள்**

**100 மீற்றர்**

எஸ்.கோகுலன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.பவித்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.லக்சன் (யா/முத்துத்தம்பி ம.வி.)

**800 மீற்றர்**

எஸ்.மயூரதன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.தேவராஜன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ்.கரிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**குண்டு போடுதல்**

எஸ்.விசாகன் (கனகரட்ணம் ம.ம.வி.), ரி.தமிழரசன் (யா/முத்துத்தம்பி ம.வி.), எஸ்.சாந்தனேஸ்வரன் (யா/பெரியபுலம் ம.வி.)

**4x100 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோண்டாவில் பரஞ்சோதி வித்தி

**நீளம் பாய்தல்**

எஸ்.சிவகாந் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.தேவராஜன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ்.கரிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**19 வயதின் கீழ் ஆண்கள்**

**100 மீற்றர்**

எல்.ஆதித்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.அனோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.அனுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**200 மீற்றர்**

ஜி.சிவேந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.டெஸ்மன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ்.குருநாத் (கோண்டாவில் ம.வி.)

**800 மீற்றர்**

ஈ.யசிந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.நதீப் (கனகரட்ணம் ம.ம.வி.), கே.கனபாலன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**1500 மீற்றர்**

ஈ.யசிந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.நதீப் (கனகரட்ணம் ம.ம.வி.), வி.ஜெனார்த்தன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

வி.யஸ்மிலன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.வாமனன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.லாவண்யன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

கே.ராகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.சிலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.டிலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

கே.சிலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.திவாகர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வீ.நிலயனன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**4x100 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி

**21 வயதின் கீழ் ஆண்கள்**

**100 மீற்றர்**

எஸ்.அருண்குமரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), கே.விதுஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.கஜீபராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி)

**200 மீற்றர்**

எஸ்.அருண்குமரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), எம்.பிரவின்ராஜ் (முத்துத்தம்பி ம.வி.)

**800 மீற்றர்**

ஆர்.தனேஸ்வரன் (கனகரட்ணம் ம.ம.வி.), ஆர்.கதீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.பிரவின்ராஜ் (முத்துத்தம்பி ம.வி.)

**1500 மீற்றர்**

ஆர்.சதீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), வீ.அனுராஜ் (கனகரட்ணம் ம.ம.வி.)

**முப்பாய்ச்சல்**

கே.கஜீபராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.விதுஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**குண்டு போடுதல்**

யு.பிரகாஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.ஜெயரூபன் (கனகரட்ணம் ம.ம.வி), வீ.சேகரன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

வி.அனுராஜ் (கனகரட்ணம் ம.ம.வி), வீ.மயூரதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.பிரதீஷ் (செங்குந்தா இந்துக் கல்லூரி)

(தொடரும்)

### கதிர்வீச்சு அபாயம்

# சீனாவில் உப்பு விற்பனை அமோகம்

(பீஜிங்)

உப்பை அதிகளவு பயன்படுத்தினால் கதிர்வீச்சு அபாயத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என செய்தி பரவியதால் சீனாவில் உப்பு விற்பனை அமோகமாக நடைபெற்றது.

இதுபற்றி தெரிய வருவதாவது, ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியை அடுத்து அங்கிருந்த அணு உலைகள் வெடித்துச் சிதறும் அபாயத்திலிருந்து வருகின்றன.

இந்நிலையில் கதிர்வீச்சு அபாயத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள அயல் நாட்டுமக்கள் பல்வேறு உத்திகளைப் பின்பற்றி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக உப்பில் கலக்கப்படும் அயடின் கதிர்வீச்சை குறைக்கும் தன்மை உண்டு என்று சீன மக்கள் நம்பினர்.

இதையடுத்து சீனப் பகுதி முழுவதும் உள்ள மக்கள் உப்புக்களை வாங்கி சேகரிக்க ஆரம் பித்துள்ளனர். இது வெறும் புரளி என்று சீன அரசு தொலைக்காட்சி மூலம் தெளிவுபடுத்தினாலும் மக்கள் நம்பத் தயாராகவில்லை. இதனைத் தொடர்ந்து அனைத்து திணைக்களம், களஞ்சியங்களிலும் இருந்த உப்புப் பக்கற்றுக்கள் உடனுக்குடன் தீர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அமெரிக்காவை அடைந்த அணுக்கதிர்வீச்சுத் துகள்கள்

(டோக்கியோ)

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், சுனாமியைத் தொடர்ந்து புகுஷிமா அணு உலைகளில் இருந்து வெளியேறிய கதிர்வீச்சுத் துகள்கள் நேற்று முன்தினம் இரவுக்குள் அமெரிக்காவின் கலிபோர்னியாவை அடைந்து விடும் என்றும் அவை மிகக் குறைந்த அளவே இருக்கும் என்பதால் மனிதர்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளியிட்ட அறிக்கையில், மனிதர்களுக்குப் பாதிப்பு உண்டாகும் அளவிற்கு கதிர்வீச்சுப் பாதிப்பு அமெரிக்காவைத் தாக்காது என்று தெரிவித்தார்.

ஜப்பானில் மீட்புப் பணியில் தற்போது 90 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சேதமடைந்த வீதிகள், நீரில் மூழ்கியிருந்த சென்டாய் விமான நிலையம் என்பன சீராக்கப்பட்டு விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப் பணிகள் இடம்பெறுகின்றன. (ஸ்ரீ-2)

### அணுக்கதிர்வீச்சைத் தடுப்பதற்கு

# அணுமின் உலைகளை மூடிவிடத் தீர்மானம்

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியைத் தொடர்ந்து புகுஷிமா நகரில் உள்ள நான்கு உலைகளில் 1,2,3இல் உள்ள யுரேனியம் எரிபொருள் கம்பிகள் உருகிவிட்டன.


தற்போது ஒன்று மற்றும் மூன்றாம் உலைகளுக்கு மின்சார இணைப்பு கொடுத்து அதன்மூலம் நீரை உட்செலுத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

நேற்று முன்தினம் மூன்றாம் உலையில் தற்காப்புப் படைகள் 50 தொன் நீரைக் கொட்டி வெப்பத்தைத் தணிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இது குறித்து டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பனி அதிகாரி ஒருவர் கூறுகையில்,

கொங்கிறீட் கலவையைக் கொட்டி அணுமின் நிலையத்தை மூடுவதற்கும் வாய்ப்புள்ளது. எனினும் தற்போது உலைகளின் வெப்பத்தைக் குறைக்கத்தான் நாங்கள் முன்னுரிமை அளித்து வருகிறோம் என்றார். (ஸ்ரீ-2)

# ஜப்பான் பிரதமருக்கு நடிகர் ரஜினிகாந் கடிதம்



ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியின் பாதிப்புக்கு அனுதாபம் தெரிவித்து நடிகர் ரஜினிகாந் ஜப்பான் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி தாக்குதலில் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜப்பான் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான ஆற்றலை கடவுள் கொடுக்க வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்காகவும் நான் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைகள் எப்போதும் உங்களுக்காக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிக்கற்களின் இரகசியம்

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

### புஷ்பராகம் (Topaz):




இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாகும். கறுப்பு நிறம் முதல் இலேசான மஞ்சள் நிறம் கொண்டதாகக் கிடைக்கும். இது வியாழன் கிரகத்தின் தன்மைகளைக் கொண்டது.

**யாருக்கு பயனளிக்கும்:**

புஷ்ராகக் கற்களை மோதிரமாக அணிவதால் தொழில் அமையாது இருப்பவர் தொழில் அமையப் பெறலாம். திருமணத் தடை மற்றும் குழந்தையின்மை குறை நீங்கி பலனடையலாம். இதற்குப் பதிலாக இதனுடைய உப இரத்தினமான(Amethyst) எனப்படும் செவ்வந்திக் கற்களையும் (Citrin) சிட்ரின் எனப்படும் மஞ்சள் நிறக் கற்களையும் அணியலாம்.இதனை குருவின் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தனு,மீன இலக்கினங்களில் பிறந்தவர்களும் 3,12,21,30 திகதிகளில் பிறந்தவர்களும் பிறந்தநாள் கூட்டு எண் 3 உடையவர்களும் இக்கற்களை அணியலாம்.

### கோமேதகம் (Hessonite):



இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாகும். தேன் நிறமுதல் பசுவின் சிறுநீர் நிறம் வரை கிடைக்கின்றது.இது இராகு கிரகத்தன்மை கொண்டது.

**யாருக்குப் பயனளிக்கும்:**

கோமேதகக் கற்களை அணிந்து இராகு தோஷம் உடையவர்கள் தோஷம் நீங்கப் பெறலாம். மாணவர்களுக்கு கல்வித் தடை நீங்கவும் கோமேதகத்தை மோதிரமாக அணியலாம்.கால சர்ப்ப தோஷமுடையவர்கள் கோமேதகத்தை அணிந்து தோஷ நிவர்த்தியடையலாம்.வைடூரியத்தை சேர்த்து அணிவது அவசியம். கோமேதகம் பதித்த மோதிரத்தை 4,13, 22, 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்களும் பிறந்த நாள் கூட்டு எண் 4 வருபவர்களும் கோமேதக மோதிரத்தை அணியலாம்.

### மரகதம் (Emerald)

இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாகும். இது பச்சை நிறமுடையது. மிகவும் விலை உயர்ந்தது. புதன் கிரகத்தின் தன்மையுடையது.

**யாருக்கு பயனளிக்கும்:**



உடம்பில் நரம்புகளின் சக்தியை அதிகரிக்கவும் மன இறுக்கம், பிரமை, பைத்தியம் போன்ற நோய்கள் நீங்க மரகதம் பதித்த மோதிரத்தை அணியலாம். இதனை அணிய இயலாதவர்கள் இதனது உப இரத்தினமான பெரிடாட் (Peridot) மற்றும் Jade (ஜேட்)ஐ அணிந்து அதிர்ஷ்டங்களை பெறலாம். 5, 14, 23 ஆம் திகதிகளில் பிறந்தவர் களும், பிறந்த நாள் கூட்டு எண் 5 வருபவர்களும், புதன் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், மிதுனம் இலக்கினமாக உடையவர்கள் இந்த மரகதக்கல் மோதிரத்தை அணிந்து பயனடையலாம்.

### வைரம் (Diamond)


இது நவரத்தினங்களிலேயே மிகவும் விலை உயர்ந்தது. இது வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் கிடைக்கின்றது. இது சுக்கிரன் கிரகத்தின் சக்தியைக் கொண்டது.

**யாருக்கு பயனளிக்கும்:**



குற்றமில்லாத தரமான வைரத்தை மோதிரமாக அணிவதால் அஸ்வமேத யாகம் செய்த பலம் கிடைக்கும். வாகன யோகம், வீடுமனை யோகம் பெறவும், சுக்கிர பலம் பெறவும், வைரத்தை அணிந்து பயன்பெறலாம். இலட்சுமி கடாட்ஷம் கிட்டும். அதிக உழைப்பின்றி நிறைந்த செல்வம் சேர்க்க வைரம் உதவுகிறது. இதற்கு பதிலாக இதன் உப ,ரத்தினமான வெள்ளை புஷ்பராகம் ( White Topaz) மற்றும் (White Sapphire) வெள்ளை சபையர் பதித்த மோதிரத்தை அணிந்து மேற்கொண்ட பலன்களை பெறலாம். சுக்கிரன் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், ரிஷப, துலா இலக்கினம் கொண்டவர்கள், 6, 24, 15 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் மற்றும் பிறந்த நாள் கூட்டு எண் 6 வருபவர்களும் வைரத்தை மோதிரமாக அணிந்து பயன்பெறலாம்.

### வைடூரியம் (Cats eye) :



இது பூனையின் கண் போன்ற அற்புதமான ஓர் நவரத்தினம். இது சாம்பல் நிறம், மஞ்சள் நிறம் மற்றும் கறுப்பு நிறங்களில் கிடைக்கும். இது கேது கிரகத்தின் தன்மையை பெற்றுள்ள இரத்தினமாகும்.

**யாருக்கு பயனளிக்கும்:**

ஆஸ்துமா நோயை குணப்படுத்தவும், மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்படுபவர்களும் வைடூரியத்தை அணியலாம். இதற்கு பதிலாக உப இரத்தினமான சந்திரகாந்தக்கல் (Moonstone), புலிக்கண் எனப்படும் (Tigers Eye)ஐ அணிந்து கேதுவின் குறைகளை போக்கிக் கொள்ளலாம். கேதுவின் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் 16, 7, 25, திகதிகளில் பிறந்தவர்களும் வைடூரியம் அல்லது அதன் உப இரத்தினத்தை அணிந்து பயனடையலாம்.

### நீலக்கல் (Blue Sapphire)

இந்த நவரத்தினங்கள் கருநீலம் மூலம் வெளிர்நிறம் வரை பல வர்ணங்களில் கிடைக்கும். சனி கிரகத்தின் தன்மையையுடையது.

**யாருக்கு பயனளிக்கும்:**



சனி பலவீனமாக உள்ளவர்களும், வழக்குகளில் வெற்றி பெறவும், எதிர்பாராத கண்டங்கள், ஆபத்து மற்றும் அகால மரணங்களிலிருந்து தப்பிக்கவும் நீலக்கல்லை அணிந்துபயன்பெறலாம். இதற்கு உப இரத்தினமான லெபராடோரிட் (Labradorite) லாபிஸ்லஜீலி (Lapiz Lazuli) போன்றவற்றை அணிந்தும் பயனடையலாம். சனியின் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் மகர, கும்ப, இலக்கினத்தில் பிறந்தவர்களும், பிறந்த நாள் கூட்டு எண் 8 வருபவர்களும் மேற்கண்டவற்றை அணிந்து பயன்பெறலாம்.

*ஜோதிட சக்கரவர்த்தி சுபாஷ்*

### பவளம் (Coral):

இது கடலில் இயற்கையாகவே விளையக் கூடிய நவரத்தினம். சில வகை பூச்சிகளின் எச்சமே பவளப் பாறைகளாக மாறுகிறது. இது சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் கிடைக்கும். இது செவ்வாய் கிரகத்திற்குரிய நவரத்தி னமாகும்.

**யாருக்கு பயனளிக்கும்:**



செவ்வாய் தோஷம் உடையவர்கள், விதவை தோஷம் உடைய பெண்கள், நீதிமன்றங்களில் வெற்றியை எதிர்பார்ப்பவர்கள், செவ்வாய் கிரகம் பலவீனமடைந்தவர்கள் பவளம் பதித்த மோதிரத்தை அணிந்து பயன் பெறலாம். இது திருஷ்டி தோஷத்தையும் நீக்கவல்லது. செவ்வாய் நட் சத்திரத்தில் பிறந்தவர்களும் மேஷ, விருச்சிக இலக் கினத்தில் பிறந்தவர்களும் 9, 18, 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களும் பவளம் பதித்த மோதிரத்தை அணிந்து நன்மை அடையலாம். (முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டு ஓடாமல் இருப்பதுதான் கடினம்.
> – ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# உலக அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்

லிபிய நாட்டின் அதிபர் கேணல் கடாபியின் ஆதரவுப் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஐ.நா.சபையின் அனுமதியை அடுத்து கடாபி மீது எந்நேரமும் தாக்குதல் இடம்பெறலாம் என்பதற்கு முன்னதாக,

ஐ.நா.பாதுகாப்பு பேரவையின் முடிவுக்கு அஞ்சி ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை கேணல் கடாபி அறிவித்துள்ளார்.

கேணல் கடாபியின் இந்த அறிவிப்பு தொடர்பில் கடாபி பயந்துவிட்டார் என ஒரு தரப்பும், அவர் புத்திசாலித்தனமான தீர்மானம் எடுத்துள்ளார் என இன்னொரு தரப்பும் வாதப்பிரதிவாதம் செய்யலாம்.

ஆனால், பொதுவில் நின்று ஆராய்வோர் ஐ.நா.பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம், அதனை அடுத்து கடாபி அறிவித்த யுத்த நிறுத்தம் என்பவற்றினூடாக,

லிபிய நாட்டில் அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படும் வன்செயல் நின்று போயுள்ளதெனக் கூறுவர்.

உண்மையில் வன்செயல் நிறுத்தப்படுவது, பொது மக்களின் உயிர் பாதுகாக்கப்படுவது என்பனவே தேவையானவையாகும். ஐ.நா.சபையின் நோக்கமும் அதுவே.

அந்த வகையில் லிபியா தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புப் பேரவை எடுத்த முடிவைப் பாராட்ட முடியும்.

அதேநேரம்,லிபிய அதிபர் கேணல் கடாபி தனது நாட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்தி கொன்றொழித்த மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் வன்னியில் நடந்த யுத்தத்தின்போது, உயிரிழந்த–காணாமல்போன– மருத்துவ வசதிகள் கிடைக்காமல் பலியாகிப்போனவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு ஆகும்.

லிபிய நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரை தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்க போர்க் கப்பலை அனுப்பவும், கடாபி மீது தாக்குதல் நடத்தும் அனுமதியை பாதுகாப்பு பேரவை அவசர அவசரமாக எடுக்கவும் முடியும் எனில் , வன்னி யுத்தத்தின் போது ஏன் அப்படி எதுவும் நடக்கவில்லை என்ற வினா ஏக்கத்துடன் –சோகத்துடன் எழுகை பெறுகின்றது.

வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழக்கையில், ஐ.நா.சபை இப்படியானதொரு முடிவை எடுத்து எங்களைக் காப்பாற்றும் என நம்பியவர்கள் கூட பலியாகிப்போகும் அளவில் எங்கள் விடயத்தில் ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பேரவை வாய்மூடி நின்றமைக்கான பலமான மூல காரணம் இருக்கவே செய்கின்றது.

அந்தக் காரணங்களுடன் தமிழ் அரசியல் தலைமைகளின் விவேகமற்ற செயல்களும் சுயநலன்களும் இணைந்து எங்கள் இனத்தை சங்காரம் செய்துவிட்டன.

அந்த இழப்பை எவராலும் ஈடுசெய்ய முடியாததாயினும் சமகாலத்தில் உலக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் செயற்படுவது எதிர்காலத்திலேனும் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழிவகுக்கும்.

ஆகவே தயவு செய்து லிபியாவை ஒரு கணம் அவதானியுங்கள். அதில் நிறைந்த அனுபவ பாடம் உளது.

# ‘புலித்தாலி’ அணிந்த தமிழ்ப்பெண்ணை கனடிய நீதிமன்றம் விடுதலை செய்தது

விடுதலைப்புலிகள் அணிவது போன்ற தாலியை அணிந்திருந்ததாகக் கூறி கனேடிய குடிவரவு அதிகாரிகளால் சிறையில் அடைக்கப்பட்ட ஈழத் தமிழ்ப் பெண்ணை விடுதலை செய்யுமாறு கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சன் சீ கப்பலில் தனது குழந்தைகளுடன் அகதியாக கனடாவுக்குச் சென்ற இப்பெண் விடுதலைப் புலிகள் அணிவது போன்ற தாலி அணிந்துள்ளதால் அவர் மீது சந்தேகம் உள்ளதாக கனேடிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவராக அவர் இருக்கலாம் என்பதால் அடைக்கலம் கொடுக்க முடியாது என்று அவர்கள் கூறியிருந்ததுடன் இப் பெண் சிறைச்சாலையில் தனித்து அடைக்கப்பட்டார்.

இப் பெண் கனேடிய சமஷ்டி நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிறுத்தப்பட்ட போது அவரது சார்பில் முன்னிலையான சட்டவாளர் திருமண நாளில் கணவன் கட்டிய தாலியையே அவர் அணிந்திருப்பதாகவும் அது குறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினார்.

ஆனால் கனடிய குடிவரவு அதிகாரிகள் அவரை வெளியே விடுவது ஆபத்தானது என்று கூறினர். ஆயினும் அந்தப் பெண்ணை 1000 டொலர் பிணையில் விடுதலை செய்ய கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டது. முன்னதாக இவரை கனடிய நீதிமன்றம் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந–5)

# யுத்தத்தின் முடிவில் தவக்காலத்தை நம்பிக்கையின் காலமாக எதிர்கொள்வோம்

–டீ.ஜோர்ச் புஸ்–

இலங்கைக்கத் தோலிக்க திருச்சபையின் தவக்காலத் திட்டத்தை இலங்கை கரித்தாஸ் நிறு வன இயக்குநர் ஜோர்ச் சிகாமணி அடிகளார் 17 மார்ச் 2011 அன்று வத்திக்கான் வானொலிக்கு வழங்கியநேர்காணலின் போது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘நம் நம்பிக்கை கிறிஸ்துவே’ என்ற கருப்பொருளில் உருவாக்கப்பட்ட 2011 ஆவது ஆண்டுக்கான தவக்காலத் திட்டம் தவக்காலம் ஒரு நம்பிக்கையின் பாலம் என்பதை விளக்குகிறது. 30 ஆண்டு கால யுத்தத்தில் இருந்து மீட்படைந்த மக்கள் ஒரு புதிய நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இத் தவக்காலத்தில் காலடி வைக்கின்றார்கள். அரசியல் பொருளாதார நெருக்கடியில் வாழ்வே சுமையாகி நம்பிக்கையில் ஒளி மங்கிய நிலையில் வாழும் மக்களுக்கு கிறிஸ்துவே நம் நம்பிக்கை என்று நம்பிக்கையை ஊட்டவே ‘ நம் நம்பிக்கை கிறிஸ்துவே’ என்ற கருப் பொருள் தெரிவு செய்யப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மக்கள் வறுமையாலும் துன்பத்தினாலும் வேதன்னயை அனுபவிக்கிறார்கள். 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். மேலும் இயற்கை அனர்த்தத்தினாலும் மனிதரால் உருவாக்கப்பட்ட அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் நம் மத்தியில் வாழ்கின்றார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. இது போன்ற துன்பத்தில் வாழ்ந்த இஸ்ரேயல் மக்களுக்கு இயேசு நம்பிக்கையின் ஒளியாகத் திகழ்ந்தார்.

யோவான் நற்செய்தி 5 ஆம் அதிகாரம் 1–8 வசனங்களில் குறிப்பிடப் படும் சம்பவத்தை அவர் விளக்கினார். அதில் உடல் ஊனமுற்ற மனிதன் ஒருவன் 38 ஆண்டுகளாக குணமாகும் நம்பிக்கையுடன் குளத்தருகே காத்திருக்கின்றான். இருந்தும் யாரும் தன்னை குளத்தில் இறக்கி விடாமையால் நம்பிக்கை இழந்து போய் இருக்கும் போது இயேசுவந்து அவனைக் குணமாக்குகிறார். இந்தக் குணமாக்கல் நம் நாட்டுக்கு அவசரம் தேவை. இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பத்தில் இருக்கிறார்கள்.

எனவேதான் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக நம் நம்பிக்கை கிறிஸ்துவே என்ற கருப் பொருளைத் தெரிவு செய் துள்ளோம். இந்த நம் பிக்கையை கிறிஸ் தவ மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை யில் வாழும் எல்லா மக்களுக்கும் கொடுக்க விரும்புகிறோம். ஆண்டவ ரின் உயிர்ப்பு விழா இந்த நம்பிக்கை யை எல்லோருக்கும் வழங்க செபிப்போம் என அவர் தெரிவித்தார்.

# இறைவனோடு இறுகப் பிணைத்து இணைக்கின்ற ஒன்றிப்பு அனுபவம் நமக்கு கிடைக்க வாழ்வோம் ( ஞாயிறு 20.03.2011 மத்தேயு 17:1-9)

இன்று இயேசுவின் உருமாற்ற விழாவைக் கொண்டாடுகின்றோம். 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விவிலிய அறிஞரான “ஓறியின்” “இயேசுவின் உருமாற்றம் எவ்வாறு எமது வாழ்வில் மாற்றத்தை கொண்டு வரமுடியும் என எமக்கு காட்டுகின்றார். அவர் தோற்றம் மாறும் போதும் அவரது முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது.அதாவது இருளின் செயற்பாடுகளுக்கு முடிவுகட்டி ஒளியின் ஆடைகளை அணிந்த ஒளியின் மக்களுக்கு அவர் வெளிப் படுத்தப்படுவது போல பிரகாசமயிற்று.அவர்கள் இனி இருளின் மக்கள் அல்ல. ஒளியின் மக்களானார்கள். ஒளியில் நேர்மையாக நடப்பவர்கள். அவரது வெளிப்பாடு அவர்களின் வெறுமனே சூரியனைப்போலல்லாது. ஒளியின் நற்செயல்களில் விபரிக்கப்பட்டது போல் பிரகாசிக்கும்” என்றார்.

இயேசுதிருமுழுக்குப் பெற்றவேளையில் தூயஆவி புறாவடிவில் தோன்றி அவர் மீது இறங்கினார் .அப்பொழுது “என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” (லூக்3:22) என்று ஒருகுரல் வானத்தில் இருந்து ஒலித்தது. தந்தையின் இவ்வார்த்தைகள் இயேசுவின் பணியை எல்லோர்முன்பும் அறிவித்து அங்கீகரித்து திடப்படுத்துவதகஅமைந்துள்ளது. தொடர்ந்துஇயேசு தம் பொதுப்பணியைத் தொடங்கினார். இயேசு தாம் துன்பங்கள் அனுபவிக்க வேண்டும், சிலுவைச் சாவை சந்திக்க வேண்டும் என அறிவித்த பின்னணியில் சீடர்கள் முன் தோற்றம் மாறினார். இயேசுவோடு மூன்று ஆண்டுகள் வாழ்ந்த சீடர்களில் மூவருக்கு மட்டும் கிடைத்த ஒரு வாய்ப்புக்குரிய அனுபவம் இந்த உருமாற்றம். இயேசுவின் மானிடத்தன்மை மறைந்து, அவரது இறைத்தன்மை இறை மாட்சியை வெளிப்படுத்தப்பட்ட விபரிக்க முடியாத ஓர் அனுபவத்தை இந்த மூவரும் உயர்ந்த மலை மேலே கண்டனர். இந் நிகழ்ச்சியை மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் நமக்கு தருகின்றனர். (மாற்9:2-8;லூக் 9:28-36) இயேசு இறை தந்தையின் அன்பார்ந்த மகன். அவருக்கு செவிமடுப்பது இறைவனுக்கே செவி மடுப்பதாகும் என்னும் இறைவனின் குரலையும் அவர்கள் கேட்கும் பேறு பெற்றனர். இங்கு“இவருக்குசெவிசாயுங்கள்” எனும் கட்டளை நமக்கும் கடவுளால் தரப்படுகிறது.

இறைமாட்சியைக் கண்டதும் அத் தெய்வீக பிரசன்னம் தங்களோடு என்றும் தங்கியிருக்க வேண்டுமென பேதுரு தன் ஆசையை தெரிவிக்கின்றார். 3 பேருக்கும் 3 கூடாரம் அமைக்கவிரும்பினார். கூடாரங்கள் விவிலியத்தில் இறை பிரசன்னத்தின் அடையாளம். பழைய ஏற்பாட்டில் பாலைவனப்பயணத்தில் இஸ்ராயேல் மக்களோடு யாவே இறைவன் தனக்கென தனிக்கூடாரம்அமைத்து குடி கொண்டார்.

“மோசே பாளையத்துக்கு வெளியே கூடாரத்தை தூக்கிச் செல்வதும் பாளையத்திற்கு வெகுதூரத்தில் கூடாரம் அடிப்பதும் வழக்கம். அதற்கு அவர் சந்திப்புக் கூடாரம் என்று பெயர் இட்டார். ஆண்டவனைத்தேடும் யாவரும் பாளையத்துக்கு வெளியேயுள்ள சந்திப்புக் கூடாரத்திற்குச் செல்வார்” (வி.ப 33:7).



இறைவன் நம்மோடு வாழும் கடவுள். இம்மானுவேல் என்பது அவரது பெயர். நம்மைத் தம் சாயலில் உருவாக்கி, நம்மோடு எந்நாளும்உறைபவர் நம் தெய்வம். அந்த தெய்வத்தின் இயல்பிலும் பேதுருவின் இந்த ஆசையிலும் ஒரே கருத்து உள்ளோடுவதை உணர முடிகிறது. கடவு ளின் பிரசன்னத்தில் நாம் இருக்கும் போது அதில் ஒரு

**பரமபிதா காட்டிய பாதை**

மகிழ்ச்சி உள்ளது. அவ ருடைய அன்பு நம்மீது பொழியப்படு கிறது.

நம்மைப் போல மனிதராக மாறி நம்மோடு இருக்கும் இறைமகன் இயேசு நம் நிலையை, உள்ளத்தின் சிந்தனைகளை தம் சொந்த அனுபவத்தில் முற்றிலுமாக அறிந்தவர்.உயர்ந்த மலைக்கு இயேசுவோடு சென்ற சீடர்கள் அங்கே அதிசயமான ஒரு நிகழ்ச்சியைக் காண்கின்றனர். இயேசுவோடு மோசே மற்றும் எலியா அங்கிருந்தனர். அவர்கள் பழைய ஏற்பாடு உடன்படிக்கையையும் கடவுள் வழங்கிய திருச்சட்டத்தையும் குறிக்கின்ற அடையாளமாவர்.

நாம்பெற்ற அனுபவத்தை நமக்கென அடைத்துவைக்காமல் அதையும் அது எமக்கு ஏற்படுத்திய தாக்கத்தையும் அதனால் நாம் பெற்ற மனமாற்றத்தையும் நம் சகோதர சகோதரிகளோடு பகிர்ந்து கொள்வோம்.

ம.பிரான்சிஸ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னிங்ஸால் வென்ற கொக்குவில் இந்து இந்துக்களின் போரில் முதல் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

பங்குஜனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இந்துக்களின் போரில் வரலாற்று சம்பியனானது.

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையிலான 4ஆவது வருட இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக்கல்லூரி அணித்தலைவர் செந்தூரன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 293 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் பங்குஜன் 101 ஓட்டங்களையும் அணித்தலைவர்உத்தமகுமரன்93 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பாக மதுஷன் 3 விக்கெட்டுக்களையும் வாமணன், நிருஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நிலாஜனன், அனோஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 82 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 44.4 ஓவர்களில் 149 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னலை பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை பொலோன் நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பணித்தது. இதில் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் செந்தூரன் 31 ஓட்டங்களையும் கிரிசோபன் 35 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் அனோஜன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக இராகுலன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பங்குஜன் 3 விக்கெட்டுக்களையும் சுஜிதரன், உத்தமகுமரன், சாம்பவன், ஜனுதாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் பொலோன் முறையில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 145 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 36 ஓவர்களில் 108 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இந்துக்களின் போர் வரலாற்றில் முதல் சம்பியனானது.




இதில் துடுப்பாட்டத்தில் பார்த்தீபன் 28, கிரிசோபன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக பங்குஜன் 4 விக்கெட்டுக்களையும் உத்தமகுமரன் 2 விக்கெட்டுக்களையும் நிலோஜன், கார்த்திக், இராகுலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் துடுப்பாட்டத்தில் 101 ஓட்டடங்களை விளாசியும் பந்து வீச்சில் மொத்தம் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வெற்றி வீரராகத் திகழ்ந்த பி.பங்குஜன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இந்துக்களின் போர் கடந்த 2008 ஆம் ஆண்டு ஆரம்பமாகி கடந்த 3 ஆண்டுகள் சமனிலையில் முடிபடைந்தது. இந்நிலையில் இந்துக்களின் போர் வரலாற்றில் முதலாவது வெற்றியை உத்தமகுமரன் தலைமையிலான கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெற்றது.

இதேவேளை, இரு அணிகளுக்கிடையிலான சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

போட்டி நாளை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




சம்பியனான கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர்...




ஆட்டநாயகன் விருதுவென்ற பி. பங்கஜன்




சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதுவென்ற எஸ். உத்தமக்குமரன்




சிறந்த களத்தடுப்பாளர் விருது வென்ற ஆர். நிருஜன்




சிறந்த பந்துவீச்சாளர் விருதுவென்ற கே. இராகுலன்




யாழ். இந்துக்கல்லூரி அணித்தலைவரிடம் ரன்னர் -அப் கிண்ணம்



பரிசளிப்பு விழாவில் பிரமுகர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸி.அணியின் தொடர் வெற்றிக்கு ஆப்பு வைத்தது பாகிஸ்தான் அணி

## 12 ஆண்டுகள் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

உலகக்கிண்ண அரங்கில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றி நடைக்கு தடைபோட்டது பாகிஸ்தான் அணி. கொழும்பில் நேற்று நடைபெற்ற பரபரப்பான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் 4 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி பரிதாபமாக தோல்வியடைந்தது.

10ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெற்ற 40 ஆவது லீக்போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த அவுஸ்திரேலிய-பாகிஸ்தான் அணிகள் மோதின. இரு அணிகளும் ஏற்கனவே காலிறுதிக்கு தகுதி பெற்ற நிலையில் இப்போட்டியில் வெற்றி பெற்றால் ஏ பிரிவில் முதலிடம் பெறலாம் என்ற நிலையில் களமிறங்கின.

இதில்நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன் 9 ஓட்டங்களுடன் உமர் குலின் வேகத்தில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.


தொடர்ந்து ஹடினுடன் இணைந்த பொன்டிங் நிதானமாக ஆடினார். இந்த ஜோடி 14.4 ஓவர்களில் 63 ஓட்டங்களை சேர்த்தபோது அணித்தலைவர் பொன்டிங் 19 ஓட்டங்களுடன் மொகமட் ஹபீஸின் சுழலில் வெளியேறினார்.

அடுத்து வந்த மைக்கெல் கிளார்க் நிதானமாக ஆடி நம்பிக்கையளிக்க மறுமுனையில் பிரட் ஹடின் 80 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 42 ஓட்டங்களை எடுத்து ரியாஸின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வைற் 8 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 30.1 ஓவர்களில் 117 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

அடுத்து மைக்கெல் ஹசி களமிறங்க மறுமுனையில் மைக்கெல் கிளார்க் 48 பந்துகளில் 2 பவுண்டரிகள் உட்பட 34 ஓட்டங்களை எடுத்து அப்துல் ரசாக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கை கொடுப்பார் என எதிர்பார்த்த மைக்கெல் ஹசியும் 12 ஓட்டங்களுடன் றீமானின் பந்தில் வெளியேறினார்.



பின்வரிசையில் சிமித் மட்டும் 25 ஓட்டங்களை தனது பங்கிற்குப் பெற அவுஸ்திரேலிய அணி 46.4 ஓவர்களில் 176 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சிமித் 32 பந்துகளின் (ஒரு பவுண்டரி உட்பட) 25 ஓட்டங்களை எடுத்தார் பந்துவீச்சில் உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் அப்துல் ரஷாக் 2 விக்கெட்டுக்களையும் றீமன், அப்ரிடி, றியாஸ், கபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 177 ஓட்டங்கள் என்ற சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணியை மிரட்டினார் பிரெட் லீ.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் முகமெட் ஹபீஸ் 5 ஓட்டங்களுடன் பிரட் லீ வேகத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து கம்ரன் அக்மல் 23 ஓட்டங்களுடன் பிரெட் லீ இடம் சிக்க பாகிஸ்தான் அணி 8.4 ஓவர்களில் 45 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அசாத் ஷபீக்-யூனிஸ்கான் ஜோடி பொறுப்புடன் ஆடி ஆறுதல் அளித்தனர்.

இந்த ஜோடியை பிரிக்க பிரெட் லீயை மீண்டும் அழைத்தார் பொன்டிங். அதற்கு கைமேல் பலன் கிடைத்தது.

அனுபவ வீரர் யூனிஸ்கான் 42 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 31 ஓட்டங்களுடன் பிரெட் லீ பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக்களமிறங்கிய நம்பிக்கை வீரர் மிஸ்பா உல்ஹக்கை பூச்சியத்துடன் வந்தவேகத்திலேயே திருப்பி அனுப்பினார் பிரெட் லீ.

இந் நிலையில் 22.5 ஓவர்களில் 98 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணியை சபீக்-உமர் அக்மல் ஜோடி நிதானமாக ஆடி மீட்டனர்.

இதில் அசாக் ஷபீக் 81 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 46 ஓட்டங்களுடன் ஜோன்சனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் அப்ரிடி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரங்கு திரும்ப பாகிஸ்தான் அணி 32.5 ஓவர்களில் 142 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து தத்தளித்தது.

எனினும் 7 ஆவது விக்கெட்டுக்காக உமர் அக்மலுடன் இணைந்த அப்துல் ரசாக் சிறப்பாக ஆடி அணியை மீட்டெடுத்தார்.

இந் நிலையில் பாகிஸ்தான் அணி 41 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 178 ஓட்டங்களைக் குவித்து 4 விக்கெட்டுக்களால் அபாரவெற்றி பெற்றது.

இதன் மூலம் ஏ பிரிவில் பாகிஸ்தான் அணி 10புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது. அவுஸ்திரேலிய அணிக்கு 3ஆவது இடம் கிடைத்தது.

துடுப்பாட்டத்தில் உமர் அக்மல் 59பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44ஓட்டங்களையும், அப்துல் ரஷாக் 20ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரெட் லீ 8ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 28 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களையும், ஜோன்சன், கிரேஜ்ஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தனர்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு கைகொடுத்த உமர்அக்மல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### 34 போட்டிகளின் பின்...

உலகக்கிண்ண அரங்கில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து 34 போட்டிகளில் தோல்வியை சந்திக்காமல் இருந்தது. சுமார் 12ஆண்டுகளுக்குப் பின் நேற்று பாகிஸ்தான் அணியிடம் தோல்வியடைந்தது.

கடந்த 1999ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில் லீக்போட்டியில் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியிடம் தோல்வியடைந்திருந்தது.

இத் தோல்விக்கு அந்த உலகக் கிண்ண தொடரில் இறுதிப் போட்டியில் பதிலடி கொடுத்து சம்பியனானது.

### 27போட்டிகளின் பின்...

அவுஸ்திரேலியாவின் ரிக்கிப் பொன்டிங் அணித்தலைவராக கடந்த 2003 உலகக் கிண்ண தொடரில் களமிறங்கினார். இவர் உலகக்கிண்ண அரங்கில் தொடர்ந்து 27போட்டிகளில் தோல்வியை சந்திக்காமல் 100 சதவீத வெற்றித் தலைவராக வலம் வந்தார்.

ஆனால் நேற்று பாகிஸ்தான் அணிக்கு எதிராக தோல்வி அடைந்ததன் மூலம் உலகக்கிண்ண வரலாற்றில் ரிக்கிப் பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி முதலாவது தோல்வியைச் சந்தித்தது.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +0.758 |
| இலங்கை | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +2.582 |
| அவுஸ்திரேலியா | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +1.123 |
| நியூசிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | +1.135 |
| சிம்பாவே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +2.026 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| இங்கிலாந்து | 6 | 3 | 2 | 1 | 0 | 7 | +0.072 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | +1.650 |
| பங்களாதேஷ் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -1.361 |
| அயர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.696 |
| நெதர்லாந்து | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | -2.045 |

## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011



ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதி யாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சம்பியனாகும் நாடு?........................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்........................................

முகவரி........................................

தொலைபேசி........................................

தே.அ.அ.இல........................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை இலக்குவைத்து...

பிரபாகரனை இலக்கு வைத்து இரண்டு இடங்களில் ஒரே நேரத்தில் தாக்கு தல் நடத்தின. ஏழு ஜெட் விமானங்கள் ஜெயந்தி நகரிலும் ஏனைய ஐந்து விமானங்கள் புதுகுடியிருப்பிலும் தாக்குதல் நடத்தின.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் முக்கிய தளபதிகளை மீட்க கடற்புலிகள் முயற்சிக்கலாம் என்பதால் அதனைத்தடுப்பதற்கு சீனன்குடாவில் இரண்டுமிக் 27 ரக விமானங்கள்மூன்று கிழமைகளாக நிறுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கியசெவ்வியின்போது விமானப் படையின் முன்னாள் தளபதியும் படைத்துறை அதிகாரிகளின்பிரதானியுமான எயார் சீவ் மார்ஷல் றொசான் குணத்திலக தெரிவித்துள்ளார். (ந-5)


## மலேசியாவில் UK Degrees

**Legenda** Education Group

25 வருட அனுபவம்
5 மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள்
40 நாடுகள் – 5,000 நண்பர்கள்

Edexcel International - UK, University of East London - UK, Coventry University - UK, Thompson Rivers University of Canada

64க்கும் மேற்பட்ட Foundation, Diploma, HND, Degree & Masters Programs

Engineering
Accounting & Finance
Computer Science & Information Technology
Medical Science
Business
Quantity Surveying & Construction
Visual Arts
Architecture



குறைந்த செலவு ! இலகுவில் விசா!! IELTS அவசியமில்லை!!!
படிக்கும்போதே / படித்து முடித்ததும் UK செல்லலாம்

### இலவச கருத்தரங்கு & நேரடிச் சந்திப்பு
பல்கலைக்கழக நேரடிப் பிரதிநிதி சஜீப்

மார்ச் 21,22 திங்கள், செவ்வாய் பிற்பகல் 2 மணி
இடம்: தியாகி அறக்கொடை நிலையம்
527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

மார்ச் 22 செவ். 10 மணி
இடம்: சிகரம் ஊடக இல்லம்

★ Spot Admission ★ O/L , A/L உடன் UK Degree

Mr.Sajeeb
Director (Sales & Marketing)
Legenda Education Group
Mobile: +6016-235 5640
Email: sajeebv@legendagroup.edu.my

Legenda Education Group Persiaran UTI, Bandar Universiti Teknologi Legenda (BUTL), Batu 12,71700, Mantin, Negeri Sembilan, Darul Khusus West Malaysia. Tel: +606-758 6909 Fax: +606-758 2150 Web: www.jati.edu.my

வட மாகாணத்துக்கான ஏக முகவர்:
**சிகரம் ஊடக இல்லம்**
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
முன் பதிவுகளுக்கு : 021-300 80 60, 0773 616 798
MEDIA

JAFFAds

இருக்கும் பணத்துடன் இங்கிலாந்துப் பட்டம் & பயணம்



# O/L Day CLASS

பிரிவு- 1- ஆரம்பம்: 21.03.2011
திங்கள் காலை 8.00 மணி
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## நாவலர்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்

(A-273)



## Avon International (Private)Limited
#138, Kanakaratnam Road, Ariyalai, Jaffna.40000

சர்வதேச விமானப்பயணச்சீட்டுக்களுக்கான கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo / Frankfurt / Colombo | 96000/= |
| Colombo / Frankfurt | 47000/= |
| Colombo / London / Colombo | 86000/= |
| Colombo / London | 46700/= |
| Colombo / Madrid / Colombo | 85000/= |
| Colombo / Madrid | 49500/= |
| Colombo / Toronto / Colombo | 178000/= |
| Colombo / Toronto | 75000/= |
| Colombo / Perth / Colombo | 109000/= |
| Colombo / Perth | 61000/= |
| Colombo / Sydney / Colombo | 109000/= |
| Colombo / Sydney | 61000/= |
| Colombo / Amsterdam / Colombo | 105900/= |
| Colombo / Amsterdam | 56000/= |

(A-2734)

மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

பயணச் சீட்டுக் கட்டணங்கள் ஆசனங்களை பொறுத்து மாறுபடும்.

**Avon International**
#138, Kanakaratnam Road ,Ariyalai,
Jaffna.40000, Srilanka.
T.P.:021 5 676 676, 021 5 679 679,
Hotline: 075 9 115 111(24 Hrs), Avonlk@rocketmail.com



## றோயல் அக்கடமி
நாவலர் வீதி-நல்லூர்

O/L DAY CLASSES

| | |
|---|---|
| கணிதம் | விஞ்ஞானம் |
| S.சிவரூபன் | இரஜிவ்வடிவேல் |
| வரலாறு | தமிழ் |
| R.S.சந்திரன் | பண்டிதர் |
| ஆங்கிலம் | சமயம் |
| P.மதன் | T.ஸ்ரீ |

ஆரம்பம்
21.03.2011 திங்கள் 8.00am
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(4089)



## நிழல் அல்ல; நிஜம்!!

### ஒரே வாரத்திலே!

- உங்கள்கருமைநிறம்நீங்கிஅழகியநிறம்
- முகப்பருக்கள்,கரும்புள்ளிகள், முகச் சுருக்கம்,கருவளையம், கழுத்துக்கருமை, உதடு கருமை நீங்கி அழகிய முகம்.
- உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்.
- வயிறு மற்றும் இடுப்பு, கை, கால் தசைகள் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
- இயற்கை மூலிகையிலான பேசியல் கள்
- முடிஉதிர்வு இளநரை பொடுகுக்கான சிகிச்சைகள்
- உடல் அழகு சிகிச்சைகள்

(4088)

"முற்றிலும்இயற்கைமூலிகைச்சிகிச்சைகள் பக்கவிளைவுகள் அற்றவை"

{ WE CARE ALWAYS }
முற்பதிவுகளிற்கு அழையுங்கள் 0774011129, 0777351954

**சானியா பியூட்டிபலஸ்**
இல.132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(முத்திரைச் சந்தி அருகாமை)



## புதிய விஞ்ஞானக் கல்லூரி

தண்ணீர் ஊற்று-முள்ளியவளை
0779354703

# A/L-2013

| | |
|---|---|
| பௌதிகவியல் | இரசாயனவியல் |
| எஸ்.தவபாலன் | எஸ்.சண் |
| உயிரியல் | இணை-கணிதம் |
| சி.ஆதவன் | எஸ்.மணிவண்ணன் |

(4085)

ஆரம்பம் :- 21.03.2011-திங்கள் :- 8.00 am



# VACANCIES AT
## TILKO JAFFNA CITY HOTEL

TILKO hotels

First and foremost star class hotel constructed under **BOI**, in the center of Jaffna town require the following staff

- **Receptionist (Female)** - Salary from 20,000/=
  - per month for suitable candidates who can speak fluent English
- General Manager / Operations Manager
- Front office Manager / Executive
- Waiters
- General Cleaner
- Gardener

★ Excellent carrier prospects.
★ Salaries commensurate with age & experience.
★ Please send your Bio data to the following E-mail address.

**citystarkb@gmail.com**

**Tilko Jaffna City Hotel (Pvt) Ltd,**
**70/6, K.K.S.Road,**
**Jaffna. (Near the General Post Office)**

(C-2727)



# ACCA
## Association of Chartered Certified Accountants

### க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கான விசேட ACCA கற்கை பிரிவு -2011

*ACCA* நிறுவனம், யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கூட்டிணைப்பானது 110 வருட கால அனுபவத்தினை உடைய, சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத் திகழும், உலகில் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற நிதியியல், முகாமையியல் கல்வித்தகைமையினை ACCA+B.Sc (Hons) in Applied Accounting கூடந்த இரண்டு வருடங்களாக சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது.

ஒரு கற்கைநெறி ஊடாக [ACCA] இரண்டு பட்டச் சான்றிதழ்களினை வழங்கும் ACCAயின் விசேட செயற்றிட்டத்தின் கீழ் க.பொ.த.[சா/த] 2011 பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற மாணவர்களில் மூன்று பாடங்கள் சித்தியடைந்த அல்லது 16 வயதிற்கு மேற்பட்ட 50 மாணவர்களினை உள்வாங்குவதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரி முழுப் பெயர், விலாசம், தொலைபேசி இல., E-mail முகவரி உள்ளடங்கலாக சுயவிபரத்தினை தயாரித்து Coordinator, Jaffna Technical Institute (JTI), No.46, Clock Tower Rd, Jaffna எனும் முகவரிக்கு 30.03.2011 ற்கு முன் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலூடாக அனுப்புதல் அவசியமானதாகும்.

மேலும் விண்ணப்படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் 'க.பொ.த.[சா/த] மாணவர்களுக்கான ACCA யின் கல்வித்திட்டம் -2011' என குறிப்பிடுதல் வேண்டும். கட்டமைப்புசார் நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர் தெரிவு இடம்பெறும்.

*Miss K. Thanusha*
*Customer Service Operations,*
*Jaffna Technical Institute (JTI)*
*No.46, Clock Tower Road ,Jaffna.*

ACCA

*T.P. :0215670345 , E-mail :jtiedu@gmail.com*

(4083)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org